புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்

அடிப்படை எழுத்தறிவு நூல்

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை – 600006

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2023*

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

காப்புரிமை

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர்
கல்வி இயக்ககம் சென்னை - *600006*
© DNFAE 2022

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

பொருளடக்கம்

பாட எண்	தலைப்பு	எழுத்துகள் உயிர்	எழுத்துகள் உயிர்மெய்	குறியீடுகள்	பக்க எண்
1	பட்டம் படம் எண்கள் அறிவோம் (1 முதல் 10 வரை)		ட, ப, ம	□் □ா □ு	01
2	சமுதாயம் – பூச்சியம் (0) அறிமுகம்		க,ச	ெ□	07
3	நாடும் நிகழ்வும் – எண்கள் அறிவோம் (11 முதல் 30 வரை)		ர, ந, வ	□ி	12
4	முயற்சியும் மூலதனமும் எண்ம இலக்கம் (டிஜிட்டல் எண்கள்)		ல, த, ன, ய, ற	□ு	17
5	அறிவும் ஆற்றலும் எண்கள் அறிவோம் (31 முதல் 100 வரை)	அ, ஆ	ழ, ள	□ு ை□	24
	மதிப்பீடு – 1				
6	இயற்கையோடு இணங்குவோம் எண்கள் 101 முதல் 1000 வரை	இ	ண	ே□ா	30
7	ஐயமின்றி ஈதல் அஃது அழகு எண்ணும் எண் பெயரும் (1 – 20)	ஈ, ஐ, ஃ			33
8	எங்கும் விஞ்ஞான உலகம் இட மதிப்பு (ஒன்றுகள், பத்துகள், நூறுகள்)	எ, உ	ங, ஞ		38
9	ஓதுவது ஒழியேல் கல்வி தொடர்பான பாடல் அதிகம் – குறைவு, ஓரிலக்கக் கூட்டல், கழித்தல்	ஒ, ஓ		ே□	41
10	ஏற்றம் தரும் ஊருணி ஈரிலக்கம் – கூட்டல், கழித்தல்	ஊ, ஏ			45
	மதிப்பீடு – 2				
11	ஔவையும் நெல்லிக்கனியும் ஈரிலக்கம் – பெருக்கல், வகுத்தல்	ஔ		ெ□ ெ□ள	51
12	நூலகப் பூங்கொத்து இருபரிமாண வடிவங்களின் பண்புகள், அமைப்புகள் (சதுரம், முக்கோணம், வட்டம், செவ்வகம்)			□ூ □ூ	55
13	கூடித் தொழில் செய்வோம் நீட்டல் அளவை			□ூ ெ□ா □ீ	59
14	கிரந்த எழுத்துகள் அறிமுகம் நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை	ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, ஸ்ரீ			63

	மதிப்பீடு – 3			
15	சாலைப் பாதுகாப்பு – முதலுதவி அஞ்சலகப் படிவங்கள்			
16	இணையவழி சேவை மற்றும் பணமில்லாப் பரிமாற்றம், காசோலை, பீம்செயலி (BHIM App) அறிமுகம்			
17	பேரிடர் மேலாண்மை அன்றாட வாழ்வியல் – கூட்டல், கழித்தல்			
	மதிப்பீடு – 4			
18	உடல் நலம் காப்போம் அன்றாட வாழ்வியல் – பேருந்து / தொடர்வண்டி பயணச்சீட்டுப் பெறுதல்			
19	சட்டமும் திட்டமும் அன்றாட வாழ்வியல் – கடிகாரம் பார்த்து நேரம் கூறுதல்			
20	நமக்கு நாமே மற்றும் கிராம சபை			
	மதிப்பீடு – 5			
21	நம் தொழில் . . நம் வளர்ச்சி – பசுமை தோட்டம் அன்றாட வாழ்வியல் – நாள்காட்டி, மாதங்கள், பருவங்கள்			
22	சாதனைப் பெண்கள்			
	மதிப்பீடு – 6			
	துணைப்பாடப் பகுதி			
	விண்ணப்பக் கடிதம், கற்றல் பாடல்கள்			
	விடுகதைகள்			
	உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் எழுதும் முறை			
	கற்போர் இறுதி மதிப்பீட்டு வினாத்தாள்			
	கற்றல் விளைவுகள்			

பாடம் 1

அ. படமும் பாடமும்

ட	படபட	பப்படம்
ப	படம்	பட்டம்
ம	மடம்	மட்டம்
□்	பட்டா	டம்டம்
□ா	பாடம்	மாடம்
□ு	முட்டு	

படம் மாட்டு பாட்டு பாடு

மாடு முட்டும் பாப்பா பாட்டு

பாப்பா பாட்டு பாடு மாமா படம் மாட்டு

ஆ. எண்கள் அறிவோம். (1–10)

XU7JT

படங்கள்	எண்கள்
	1
	2
	3
	4
	5
	6
	7
	8
	9
	10

பயிற்சிகள்

1. வட்டமிட்ட எழுத்தைப்போல் இருக்கும் எழுத்தை வட்டமிட்டுக் காட்டுக.

(ப)	ம	ப	பா	ட்	ப
(ம)	டா	பா	மா	ம	மா
(டா)	ட்	டா	ட	ம	டா

2. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.

படம்	மடம்	பட்டம்	மட்டம்
பாடம்	மாடம்	பாட்டு	மாட்டு
பாடு	மாடு	படு	மடு
பட்டு	மட்டு		

3. குறியீட்டைச் சேர்த்து எழுதுக.

	ப	ட	ம
□்			
□ா			
ு□			

4. பின்வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.

_ டம்

ப _ டம்

_ ப்பா

5. எழுதிப் பழகுவோம்

ட ப ம ட் ப் ம்

ட ப ம ட் ப் ம்

6. படங்களை எண்ணி உரிய எண்ணுடன் பொருத்துக.

5

7

8 

9

7. கட்டங்களில் விடுப்பட்ட எண்களை எழுதுக.

1		3		5			8		10

8. சம எண்ணிக்கையில் உள்ள படங்களைப் பொருத்துக.

	
	
	

பாடம் 2

அ. சமூகம்

ச	சட்டம்	மச்சம்	சாகசம்
க	கட்டு	பக்கம்	பாகம்
மூ	மூட்டு	சமூகம்	மூக்கு

பாசம் காட்டு

கட்டடம் கட்டு

பாப்பா முகம் காட்டு

கடுகு கசக்கும்

மூக்கு காட்டு

குடும்பக் கட்டுப்பாடு

ஆ. பூச்சியம் (0) – அறிமுகம்



3 கிளிகள்

2 கிளிகள்

1 கிளி



0 பூச்சியம்

பயிற்சிகள்

1. பின்வரும் சொற்களை உரிய ஒலிப்புடன் (குறில்/நெடில்) படித்துக்காட்டுக.

படம் – பாடம்	மடம் – மாடம்	முட்டு – மூட்டு
கட்டு – காட்டு	முக்கு – மூக்கு	படு – பாடு
மட்டு – மாட்டு	முட்டம் – மூட்டம்	பட்டு – பாட்டு

2. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

க	கடம்	பாகம்	பக்கம்
ச	சக்கரம்	கசடு	மச்சம்
மூ	மூக்கு	பதின்மூன்று	பனிமூட்டம்

3. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை நிரப்புக.

1. கட்டடம் ------------- (கட்டு/ முட்டு)
2. சமூகப் -------------- (பட்டு / பாட்டு)
3. படச் -------------- (சட்டம்/ கட்டம்)
4. பாப்பா -------------- (முக்கு/ மூக்கு)
5. சட்டப் -------------- (படம் / பாடம்)

4. கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து புதிய சொற்கள் மூன்றினை உருவாக்குக.

எடுத்துக்காட்டு – கட்டுப்பாடு – கட்டு, பாடு, பாட்டு

படச்சட்டம் – -------, -------, -------

சமூகப்படம் --------, -------, -------

5. எழுதிப் பழகுக.

ச சா ச்

ச சா ச்

க கா க்

க கா க்

6. மீனா எட்டு பூ பூத்திருக்கும் செடியிலிருந்து எட்டு பூக்களையும் பறித்து சூடிக் கொண்டாள் எனில் செடியில் மீதமுள்ள பூக்கள் எத்தனை?

7. எண்களுக்கேற்ப மணிகள் வரைக.

5	
3	
0	
2	

பாடம்
3

அ. நிருவாகம்

ர	காரம்	கரம்	மரம்
ந	நகம்	நம்பி	நகரம்
வ	வட்டம்	பருவம்	வரம்
ி	சிரி	கிடா	விட்டம்

நம் நாடு

நாகம் பார்

பட்டம் விடு

சக்கரம் மாட்டு

நாடகம் பார்

பம்பரம் விடு

நகர நாகரிகம்

கரகாட்டம் பார்

ஆ. டிஜிட்டல் எண்கள்



பயிற்சிகள்

1. கட்டத்தில் இடம் மாறியுள்ள எழுத்துக்களை முறைப்படுத்திச் சொல்லாக்குக.

ட	ம	ம்		–	மடம்
க	ம்	கா		–	
ட	ப	கு		–	
ர	க	ம்	க	–	
க	ட	நா	ம்	–	

2. கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் முதல் எழுத்தை மாற்றி புதிய சொற்களை உருவாக்குக

படம்

குடம்

பாகம்

––––

பாக்கு

––––

3. நடு வட்டத்திலுள்ள எழுத்தை மற்ற எழுத்துகளுடன் இணைத்து புதிய சொற்களை உருவாக்குக.

பாடு
____
____
____
____
____

4. பின்வரும் எடுத்துக்காட்டைப்போல் எழுதுக.

நா	கு	நாடு
பா	டு	பாகு
மா	மா	
மா	மி	
ந	டி	
ம	டு	

5. எழுதிப் பழகுக.

ந வ ர ந் வ் ர்

நா வா ரா

6. டிஜிட்டல் எண்களைப் படித்துக்காட்டுக.

1234567890

7. உங்களுடைய கைபேசி எண்ணை எழுதுக.

8. நீங்கள் எழுதிய கைபேசி எண்ணில் ஒருமுறைக்குமேல் இடம்பெற்றிருக்கும் எண்களை கீழே எழுதுக.

பாடம் 4

அ. முயற்சியும் மூலதனமும்



ல	காலம்	தாலாட்டு	வாசல்
த	தட்டு	தாகம்	புத்தகம்
ன	தானம்	கனா	கன்னி
ய	வயல்	யார்	காய்
ற	மன்றம்	புறா	முயற்சி
	புவி	வாயு	கனிவு

பயம் தவிர் கற்க கசடற

கடிதம் படித்தான் மன்னன் மகன்

வனம் காப்பாய் புத்தகம் வாசி

முயன்றால் முடியும்

முயற்சி தானே மூலதனம்
முயலாவிட்டால் ஏது பணம்?
மூளை கூட மூலதனம்
மூடிய கதவையும் திறந்துவிடும்

வாடிய பயிருக்கு நீருண்டு
வாசல் தோறும் வழியுண்டு
சும்மா இருந்தால் எதுவுண்டு?
சோம்பேறிப் பட்டம் தானுண்டு

விரைந்து தொழிலைத் தொடங்கிடு
வெற்றிப் பாதையில் நடந்திடு
வேண்டும் பொருளை ஈட்டிடு
வறுமை நிலையை ஒழித்திடு

வாய்ப்பு உலகம் என்பது
வானம் போலே பரந்தது
சிறகை விரித்து எழுந்திடு
சிறப்பாய் வாழ்வை நடத்திடு

சொந்தக் காலில் நின்றிட
சோலைக் காற்றாய் வீசிட
உந்து சக்தி உழைப்புதான்
உயர்ந்து நின்று வென்றிடு

கவிஞர் அனுமா

ஆ. எண்கள் அறிவோம் (11 – 30)

	11		21
	12		22
	13		23
	14		24
	15		25
	16		26
	17		27

	18		28
	19		29
	20		30

பயிற்சிகள்

1. பின்வரும் படங்களுக்குரிய பெயர்களை எழுதுக.

			

2. சொற்களை முறைப்படுத்தித் தொடர் அமைக்க.

எடுத்துக்காட்டு : பாடும் பாட்டு பாப்பா – பாப்பா பாடும் பாட்டு

1. தாலாட்டு தாய் பாடிய – ----------------------.
2. மயில் வயலில் நின்ற – ----------------------.
3. நின்றான் மரப்பாலத்தில் மன்னன் – ----------------------.
4. படித்தான் கடிதம் கந்தன் – ----------------------.
5. நாயகன் வனம் காத்த – ----------------------.

3. பின்வரும் கட்டங்களிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமான சொற்றொடர் உருவாக்குக.

புத்தகம்	பாலம்	கதவு
முகம்	பால்	பாட்டு
கரும்பு	பக்கம்	தயவு

பார்	வா	பாடு
குடி	தின்	படி
கட்டு	திற	காட்டு

1. புத்தகம் படி   2. ------------------   3. ------------
4. -------------   5. ------------------   6. ------------
7. -------------   8. ------------------   9. ------------

4. குழுவில் பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1.	காகம்	புறா	மயில்	புலி
2.	கனி	வானம்	மரம்	காய்
3.	முகில்	நிலவு	வாரம்	வானம்
4.	சிரிப்பு	தானம்	பயம்	வருத்தம்
5.	பாப்பா	வட்டம்	தாய்	தாலாட்டு

5. எழுதிப் பழகுக.

ல த ன ய ற

ல த ன ய ற

ல் த் ன் ய் ற்

ல் த் ன் ய் ற்

6. எண்களுக்கேற்ப மணிகள் வரைக

17	
26	
22	
11	

7. கட்டங்களில் விடுப்பட்ட எண்களை நிரப்புக.

11	12			15		

பாடம் 5

அ. வாழ்வியலும் ஆளுமையும்

அ	அம்மா	அப்பா	அத்தை
ஆ	ஆடு	ஆழம்	ஆவல்
ழ	தமிழ்	பழகு	கழுகு
ள	பள்ளம்	மிளகு	குளிர்
□ு	காற்று	வாத்து	மனு
ை□	சிலை	வாழை	வைகை

தை மாதம்

பல்லுயிர் காத்திடு

முயன்றால் முடியும்

குலுக்கலில் பரிசு விழுந்தது

ஆழ்கடலில் முத்து கிடைத்தது

கிழக்குவாசல்

தமிழைப் படி

வளத்துடன் வாழ்க

அச்சம் தவிர்

அம்மா அன்பு மிக்கவர்

ஆ. எண்கள் அறிவோம் (31 – 100)

31	32	33	34	35	36	37	38	39	40
41	42	43	44	45	46	47	48	49	50
51	52	53	54	55	56	57	58	59	60
61	62	63	64	65	66	67	68	69	70
71	72	73	74	75	76	77	78	79	80
81	82	83	84	85	86	87	88	89	90
91	92	93	94	95	96	97	98	99	100

பயிற்சிகள்

1. எழுத்தை வட்டமிடுக.

ழ	பழம்	பவழம்	தமிழகம்	பழகு
ள	பள்ளம்	களம்	குளவி	கவளம்
லு	அலுவலகம்	முதலுதவி	காலுறை	குலுக்கல்
ளை	தவளை	மாதுளை	மழை	தரை
அ	அச்சம்	அன்பு	அப்பம்	அறிவு
ஆ	ஆட்டம்	ஆமை	ஆடு	ஆவல்.

2. படித்துப் பழகுக.

ழ ள அ ஆ து று லு

லை கை மை ழை ளை ரை

3. படித்துப் பொருள் அறிக.

வாழை

வாளை

வால்



வாள்

குழவி

குளவி

பழம்

பலம்

கரை

கறை

4. படித்துக்காட்டுக.

1. குழலி பழம் தின்றாள்.
2. வாழைப்பழம் வழுக்கிவிட்டது.
3. தம்பி பழம் பறித்தான்.

5. எழுதிப் பழகுக

அ ஆ ழ ள று லை

6. விடுபட்ட எண்களை நிரப்புக.

36		38			41	

54	55					60

	87			90		

மதிப்பீடு – 1

1. வட்டமிட்ட எழுத்தைப்போல் இருக்கும் எழுத்தை வட்டமிட்டுக் காட்டுக.

ப	ம	ப	பா	ட்	ப
ச	க	ச	கா	சா	ச
டா	ட்	டா	ட	ம	டா

2. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

க	பாகம்	கடம்	பக்கம்
வ	பருவம்	வட்டம்	வடகம்
ள	மிளகு	பள்ளம்	பவளம்
லா	பலா	தாலாட்டு	நிலா

3. குறியீட்டைச் சேர்த்து எழுதுக.

	க	ட	ம
□்			
□ா			
ெ□			
ை□			

4. படித்துக்காட்டுக

படம்	மூக்கு	பட்டம்	மாடு
பாடம்	மாடம்	பாட்டு	கரகம்
பாடு	நாகம்	சக்கரம்	பம்பரம்
முகம்	மட்டு	நாகரிகம்	நாடு

5. பின்வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.

_ டம்

ப _ டம்

_ ப்பா

6. எண்ணிப் பொருத்துக.

6

7

10

9 

7. எண்களுக்கேற்ப மணிகள் வரைக

15	
13	
18	
16	

8. விடுபட்ட எண்களை நிரப்புக.

51		53		55				59	

பாடம் 6

அ. இயற்கையோடு இணைவோம்

TQ3UC

இ	இசை	இந்தியா	இயற்கை
ண	பணம்	திண்ணை	கணுக்கால்
ே□ா	கோடு	மோர்	தோட்டம்

வாசலில் கோலம் போடு

தினைமாவுக்கு இணையேது

இல்லாதவருக்கு இரக்கம் காட்டுக

வாழைப்பழம் சத்துமிக்கது

இயற்கையோடு இணைவோம்

பனைமரம் தமிழகத்தின் அடையாளங்களில் ஒன்று

ஆ. எண்கள் அறிவோம் (101 – 1000)

101	102	103	104	105	106	107	108	109	110
111	112	113	114	115	116	117	118	119	120
121	122	123	124	125	126	127	128	129	130
131	132	133	134	135	136	137	138	139	140
141	142	143	144	145	146	147	148	149	150
151	152	153	154	155	156	157	158	159	160
161	162	163	164	165	166	167	168	169	170
171	172	173	174	175	176	177	178	179	180
181	182	183	184	185	186	187	188	189	190
191	192	193	194	195	196	197	198	199	200

நீங்களும் எழுதலாம்

301	302			305					310
	402			405			408		
521		523						529	530
631		633						639	
	742			745			748		
851						857			
			964		966				970

பயிற்சிகள்

1. எழுத்தை அடையாளம் கண்டு வட்டமிடுக.

இ	இரும்பு	இது	இன்று
ண	பணம்	கணம்	மனம்
கோ	போட்டி	தோகை	கோலம்

2. பின்வரும் எழுத்துகளைப் படித்துக்காட்டுக.

இ ண ணை தோ போ கோ

3. படத்தையும் சொல்லையும் பொருத்துக.

		ஆணி
		சோளம்
		கோட்டை
		மணி
		இலை

4. எழுதிப் பழகுக.

இணைகோடுகள்

5. விடுபட்ட எண்களை நிரப்புக

341		343			346		348
410		412			415		
945				949			
895						901	

பாடம் 7

அ. ஐயமின்றி ஈதல் அஃது அழகு

ஐ	ஐயம்	ஐயா	ஐந்து
ஈ	ஈசல்	ஈரம்	ஈட்டி
ஃ	அ ஃ து	எ ஃ கு	இ ஃ து

ஈச்சம்பழம் இனிக்கும்

ஈடுபாட்டுடன் படி

அஃகம் சுருக்கேல்

எஃகு போல் உடல்

ஐயம் இட்டு உண்

ஐயம் தவிர்

பாடல்

அம்மா என்று அழைத்தேதான்
ஆசை மகளும் வந்தாளே
இன்சுவை என்றே பெயரிட்டு
ஈர்ப்புடன் இறுக அணைத்தேனே
உள்ளன்போடு என்கை பிடித்து
ஊஞ்சல் ஆடி மகிழ்ந்தாளே
என்றும் இன்பம் தங்கிடவே
ஏக்கம் அகற்றிட வந்தாளே
ஐயம் ஏதும் எனக்கில்லை
ஒளிர்மதி போல வானில்தான்
ஓயா அலைகடல் போலத்தான்
ஔவைபோலப் புகழ் பெறுவாள்
அஃதே என் எதிர்பார்ப்பாகும்

VB3VB

ஆ. எண்ணும் எண்ணுப்பெயரும் (1 – 20)

எண்	எண்ணுப்பெயர்
1	ஒன்று
2	இரண்டு
3	மூன்று
4	நான்கு
5	ஐந்து
6	ஆறு
7	ஏழு
8	எட்டு
9	ஒன்பது
10	பத்து

எண்	எண்ணுப்பெயர்
11	பதினொன்று
12	பன்னிரண்டு
13	பதின்மூன்று
14	பதினான்கு
15	பதினைந்து
16	பதினாறு
17	பதினேழு
18	பதினெட்டு
19	பத்தொன்பது
20	இருபது

10 – 100 பத்து பத்தாக எண்ணுவோம் எழுதுவோம்.

10	பத்து
20	இருபது
30	முப்பது
40	நாற்பது
50	ஐம்பது
60	அறுபது
70	எழுபது
80	எண்பது
90	தொண்ணூறு
100	நூறு

இருபது
முப்பது
நாற்பது
ஐம்பது
அறுபது
எழுபது
எண்பது
தொண்ணூறு

ஒன்று
இரண்டு
மூன்று
நான்கு
ஐந்து
ஆறு
ஏழு
எட்டு
ஒன்பது

21. இருபத்து ஒன்று
22. இருபத்து இரண்டு
23. இருபத்து மூன்று
24. __________
25. __________
26. __________
27. __________
28. __________
29. __________

நூறு, நூறாக எண்ணுவோம்.

100	நூறு	600	அறுநூறு
200	இருநூறு	700	எழுநூறு
300	முந்நூறு	800	எண்ணூறு
400	நானூறு	900	தொள்ளாயிரம்
500	ஐநூறு	1000	ஆயிரம்

பயிற்சிகள்

1. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

ஐ	ஐவிரல்	ஐவர்	ஐந்து	ஐயா
ஈ	ஈச்சமரம்	ஈயம்	ஈறு	ஈதல்
ஃ	அஃது	எஃது	அஃகம்	இஃது

2. ஒலித்துக்காட்டுக.

ஐ ஈ ஃ

3. சரியான எழுத்தை நிரப்பிப் படிக்க.

ஐ வர்	☐ந்து	☐யா
ஈ சல்	☐ரம்	☐ட்டி

4. ஃ எழுத்து உள்ள வட்டங்களை இணைத்து, அதன் வடிவத்தைக் காண்க.



5. எழுதிப் பழகுக.

ஐயமின்றி ஈதல் அழகு

6. கீழ்க்காணும் பேருந்துகளிலுள்ள எண்ணுக்கு ஏற்ற எண்ணுப்பெயர் எழுதுக.

____

____

____

7. எண்ணையும் எண்ணுப்பெயரையும் பொருத்துக.

ஒன்பது	7
ஏழு	5
ஐந்து	9

8. எண்ணுப்பெயருக்கேற்ற எண்களை எழுதுக.

பன்னிரண்டு	=	__________	பதினைந்து	=	__________
எட்டு	=	__________	பதினாறு	=	__________
இருபது	=	__________	பத்தொன்பது	=	__________

9. விடுபட்ட எண்ணு பெயரை நிரப்புக.

75	=	எழுபத்து __________	79	=	__________
82	=	எண்பத்து __________	88	=	__________ எட்டு
93	=	__________ மூன்று	41	=	__________ ஒன்று
60	=	__________	35	=	__________ ஐந்து

அ. உள்ளங்கையில் விஞ்ஞானம்



உ	உலகம்	உள்ளம்	உருவம்
எ	எறும்பு	எழில்	எடை
ங	சங்கு	பங்கு	மங்கை
ஞ	ஞாயிறு	ஞாலம்	ஞானம்

கலங்கரை விளக்கம்

பொங்கல் விழா

தஞ்சைப் பெரிய கோவில்

சங்கே முழங்கு

ஒட்டகச்சிவிங்கி உயரமானது

சாலையில் அங்குமிங்கும் ஓடாதே

இஞ்சிச் சாறு நெஞ்சுச் சளியைக் கரைக்கும்

மங்கை, தங்கையுடன் நுங்கு சாப்பிட்டாள்

ஆ. இட மதிப்பு (ஒன்றுகள், பத்துகள், நூறுகள்)

45 என்ற ஈரிலக்க எண்ணைக் கருதுவோம். இதனை உருவாக்க 40 மற்றும் 5 என்ற இரண்டு எண் அட்டைகள் தேவை.

54 என்ற ஈரிலக்க எண்ணைக் கருதுவோம். இதனை உருவாக்க (45 இல் உள்ள இலக்கம் மாறுபட்டுள்ளது). 50 மற்றும் 4 என்ற அட்டைகளைத் தேர்ந்தெடுப்போம்.

4 பத்துகள் + 5 ஒன்றுகள் = 40 + 5 = 45   5 பத்துகள் + 4 ஒன்றுகள் = 50 + 4 = 54

பயிற்சிகள்

1. **பின்வரும் கதையைப் படித்துக்காட்டி, வினாக்களுக்கு வாய்மொழியாக விடை கூறச்செய்க.**

கந்தனுக்குப் பிள்ளைகள் நால்வர், அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டே இருப்பதை நினைத்துக் கந்தன் கவலைப்பட்டான். நால்வரையும் அழைத்தான். ஆளுக்கொரு குச்சியைக் கொடுத்து, உடைக்கச் சொன்னான். எல்லாரும் எளிதாக உடைத்தனர். இப்போது, அதன் பிறகு கந்தன் அவர்களிடம், பல குச்சிகள் கொண்ட கட்டு ஒன்றை அவர்களிடம் கொடுத்து உடைக்கச் சொன்னான். பிள்ளைகள் உடைக்க முடியாமல் திணறினர். இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள் என்று கேட்டான் கந்தன். பிள்ளைகளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. பல குச்சிகள் கொண்ட கட்டை எளிதாக உடைக்க முடியாததுபோல், நீங்கள் நால்வரும் சண்டையின்றி ஒற்றுமையாக வாழ்ந்தால், மற்றவர்களால் உங்களுக்கு எந்தக் கெடுதலும் நேராது என்றான் கந்தன் இனி, ஒற்றுமையாக வாழ்வோம் என உறுதி கூறினர் கந்தனின் பிள்ளைகள்.

XM9IE

1. கந்தனுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?
2. கந்தன் கவலைப்படக் காரணம் என்ன?
3. பிள்ளைகளைத் திருத்த கந்தன் பயன்படுத்திய பொருள் எது?
4. பல குச்சிகள் கொண்ட கட்டைப் பிள்ளைகள் எளிதில் உடைத்தார்களா? இல்லையெனில் என்ன காரணம்?
5. ஒற்றுமையை வலியுறுத்தும் இதுபோன்ற வேறொரு கதையைக் கூறுக.

2. உரிய எழுத்தை வட்டமிடுக

1. உ	உள்ளம்	உதவு	உரிமை
2. எ	எள்	எலி	எருது
3. ங்	சங்கு	தங்கு	நுங்கு
4. ஞா	ஞாயிறு	ஞாலம்	ஞானம்

3. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.

உ எ ங் ஞா

4. விடுகதையைப் படித்துச் சரியான விடையைப் பொருத்துக.

1. காற்றில் பறக்கும்	–	உணவு
2. இரவில் தேவை	–	ஞாயிறு
3. காட்டின் அரசன்	–	சிங்கம்
4. வாரத்தின் முதல் நாள்	–	உறக்கம்
5. உயிர் வாழத் தேவை	–	பஞ்சு

5. படம் பார்த்துப் பெயர் எழுதுக.

			

6. எழுதிப் பழகுக.

உலகம் மதிக்க வாழ்

பாடம்
9

அ. ஓதுவது ஒழியேல்

ஒ	ஒன்று	ஒட்டு	ஒட்டகம்
ஓ	ஓடு	ஓடம்	ஓவியம்
ே□	தேதி	நேரம்	கையேடு

ஒயிலாட்டம் ஆடுவோம்.

ஒற்றுமை ஓங்குக.

பேருந்து நிறுத்தம்.

பேரிக்காய் பச்சை நிறம்.

புள்ளிமான் துள்ளி ஓடியது.

ஒற்றுமையே வலிமை.

கல்வி தொடர்பான பாடல்

KP7ZL

அறிவு என்னும் பாடத்தையே
அழகாகக் கற்றுக்கொள்வோம்
தன்னானே னானே

ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஒருமைப்பாட்டைக் காத்திடுவோம்
தில்லாலே லேலோ

சாலையிலே நடக்கும்போது
சாலைவிதியைக் கடைப்பிடிப்போம்
தன்னானே னானே

வாழ்க்கை என்னும் பயணத்தையே
வளத்தோடு கடந்திடுவோம்
தில்லாலே லேலோ

கடமையையும் உரிமையையும்
கண்ணாகப் போற்றிடுவோம்
தன்னானே னானே

பழைமையையும் புதுமையையும்
பண்புடனே ஏற்றிடுவோம்
தில்லாலே லேலோ

அன்போடு அனைவரையும்
அரவணைத்தே மகிழ்ந்திடுவோம்
தன்னானே னானே

பெரியோரை மதித்திடுவோம்
பெருமையுடன் வாழ்ந்திடுவோம்
தில்லாலே லேலோ

பெண்கல்வி போற்றிடுவோம்
பேரும்புகழும் பெற்றிடுவோம்
தன்னானே னானே

உண்மையையே பேசிடுவோம்
உறவுகளைப் பேணிடுவோம்
தில்லாலே லேலோ

ஆ. ஓரிலக்கக் எண்களின் கூட்டல் மற்றும் கழித்தல்

அதிகம் – குறைவு

7 தக்காளி



குறைவு
சிறிய எண் 7

9 தக்காளி



அதிகம்
பெரிய எண் 9

கூட்டல்



3 + 4 = 7

கூட்டுக

7	4	2	6	5
+ 4	+ 9	+ 8	+ 1	+ 5
___	___	___	___	___

TD9WF

கழித்தல்



5



5 – 4 = ☐

கழிக்க

7	6	8	5	4
– 4	– 3	– 2	– 5	– 0
___	___	___	___	___

VR7BG

பயிற்சிகள்

1. சரியான எழுத்தை அடையாளம் காண்க.

ஒ	ஒருவர்	ஒற்றுமை	ஒட்டகம்
ஓ	ஓலை	ஓடம்	ஓதல்
ே□	சேவல்	வேலை	தேடு

2. படித்துப் பழகுவோம்.

ஒ ஓ வே சே தே பே

3. பின்வரும் படத்துக்குரிய சரியான சொல்லை எழுதுக.

4. ஒ – ஓ வேறுபாடு அறிந்து படித்துக்காட்டுக.

ஒட்டு _____ ஓட்டு ஒடி _____ ஓடி

1. கிழிந்த தாளைப் பசையால் ஒட்டு
2. ஈயைத் தூர ஓட்டு

5. கூட்டுக

2 + 4 = ☐ ●● + ●●●●

3 + 5 = ☐ ●●● + ●●●●●

6. கழிக்க

9 – 2 = ☐ ●●●●●●●●● – ●●

8 – 4 = ☐ ●●●●●●●● – ●●●●

7. செயல்பாடு

(இருவர்) 2 பகடைகளை உருட்டச் செய்து அதில் வரும் எண்களைக் கூட்டிப் பதியச் செய்தல்

கண்ணன்	4				
அறிவழகன்	3				
கூடுதல்	7				

பாடம் 10

அ. ஊரும் ஏரும்

ஊ	ஊர்	ஊட்டி	ஊத்தப்பம்
ஏ	ஏடு	ஏர்	ஏரி

நாட்டில் ஏரிகள் ஏராளம்

ஏட்டுக்கல்வி உயர்வு தரும்

ஊராட்சி நமது ஊன்றுகோல்

ஊக்கம் கை கொடுக்கும்

ஏலக்காய் மணம் மிக்கது

ஊட்டி ஏரியில் படகுப்போட்டி

ஆ. ஈரிலக்கக் எண்களின் கூட்டல் மற்றும் கழித்தல்

ஈரிலக்க எண்களின் கூட்டல்

	பத்து	ஒன்று
	3	5
+	4	2
	7	7

	பத்து	ஒன்று
	(1)	
	2	8
+	5	7
	8	5

வாழ்க்கைக் கணக்கு

மாலா முதல் நாள் 14 கூடைகள் பின்னினாள். இரண்டாம் நாள் 16 கூடைகள் பின்னினாள். எனில் (இரண்டு நாளும்) அவள் பின்னிய மொத்தக் கூடைகள் எத்தனை?

14+ 16 = ☐

ஈரிலக்க எண்களின் கழித்தல்

	பத்து	ஒன்று
	7	5
−	4	3
	3	2

	பத்து	ஒன்று
	(8)	(16)
	~~9~~	~~6~~
−	5	7
	3	9

வாழ்க்கைக் கணக்கு

சிறுமி 22 பூக்களும், சிறுவன் 18 பூக்களும், வைத்துள்ளார்கள். இருவரிடமும் உள்ள பூக்களின் எண்ணிக்கையின் வேறுபாடு எத்தனை?

22 – 18 = ☐



3. கூட்டி விடை காண்க.

பத்து	ஒன்று
5	4
	7

பத்து	ஒன்று
6	2
1	8

நூறு	பத்து	ஒன்று
	6	9
	5	2

வாழ்க்கைக் கணக்குகள்

1. அலமேலு தன் தோட்டத்தில் 8 தென்னங்கன்றுகளும் 6 வாழைக்கன்றுகளும் நட்டாள் எனில் அவள் நட்ட மொத்த மரக்கன்றுகள் எத்தனை?

+



=

4. கழித்து விடை காண்க.

1. கீழே உள்ள ஈரிலக்க எண்களை கழிக்க

	ப	ஒ
	2	2
-	1	8

	ப	ஒ
	3	7
-	2	9

	ப	ஒ
	4	0
-	3	5

	ப	ஒ
	9	2
-	8	0

	ப	ஒ
	7	0
-	2	7

	ப	ஒ
	8	4
-	7	8

	ப	ஒ
	6	3
-	5	6

	ப	ஒ
	8	0
-	5	2

32 - 28 =   94 - 59 =   72 - 46 =

46 - 17 =   50 - 36 =   85 - 67 =

2. அழகன் 45 பழங்களில் 28 ஐ விற்றுவிட்டால் மீதம் உள்ள பழங்கள் எத்தனை?

பயிற்சிகள்

1. **சரியான எழுத்தை அடையாளம் காண்க.**

ஊ	ஊக்கம்	ஊஞ்சல்	ஊதல்
ஏ	ஏணி	ஏற்றம்	ஏலக்காய்

2. **பின்வரும் எழுத்துகளைச் சரியாக ஒலித்துக்காட்டுக.**

ஊ ஏ

3. **படித்துப் பழகுக.**
   1. வண்டியில் ஊர்வலம் போகலாம்.
   2. கற்போர் வாழ்வில் ஏற்றம் உண்டு.
   3. ஏலக்காய் மணம் மிக்கது.
   4. ஊருணி நிறைந்தால் ஊருக்கே மகிழ்ச்சி.

4. **பின்வரும் சொற்களில் விடுபட்ட ஒரே எழுத்து அனைத்திற்கும் பொருந்தும். அந்த எழுத்தைக் கண்டுபிடித்து எழுதுக.**

___ ழுமலை	___ ணி	___ ரி	___ ழு
___ ரார்	___ ட்டி	___ ர்வலம்	___ ராட்சி

5. **எழுதிப் பழகுக.**

ஏட்டுக்கல்வி ஏற்றம் தரும்

6. நிரப்புக.

23 = __________ பத்துகள் __________ ஒன்றுகள்

54 = __________ பத்துகள் __________ ஒன்றுகள்

சிந்திக்க



மதிப்பீடு – 2

1. சரியான எழுத்தை நிரப்பிப் படிக்க.

ஐ வர்	ந்து	யா
ஈ சல்	ரம்	ட்டி
அ ப்பா	ம்மா	த்தை

2. சரியான விடையைப் பொருத்துக.

1. காற்றில் பறக்கும்	–	உணவு
2. இரவில் தேவை	–	ஞாயிறு
3. காட்டின் அரசன்	–	சிங்கம்
4. வாரத்தின் முதல் நாள்	–	உறக்கம்
5. உயிர் வாழத் தேவை	–	பஞ்சு

3. படம் பார்த்துப் பெயர் எழுதுக.

4. பின்வரும் கூற்றுகளைப் படித்து, விடை காண்க.

1. இரவி 15 வாழைப்பழங்களும் 10 மாம்பழங்களும் வாங்கினார்? அவர் வாங்கிய மொத்தப்பழங்கள் எத்தனை?

2. அழகன் 45 பழங்களில் 28 ஐ விற்றுவிட்டால் மீதம் உள்ள பழங்கள் எத்தனை?

பாடம் 11

அ. ஔவையும் நெல்லிக்கனியும்

ஔ	ஔவை	ஔவியம்	ஔடதம்
ெ□	வெற்றி	பெட்டி	நெல்லி
ெ□ள	கௌரவம்	வௌவால்	மௌனம்

சின்ன கண்ணன் வெண்ணெய் தின்றான்.

வெல்லம் இரும்புச்சத்து மிக்கது.

நல்லெண்ணெய் உடல்சூட்டைத் தணிக்கும்.

வானில் வெண்ணிலா தோன்றியது.

பெருமழை பெய்ததால் செடிகள் சாய்ந்தன.

ஆ. பெருக்கல் மற்றும் வகுத்தல்

ND8JY

பெருக்கல்



2 + 2 + 2 + 2 + 2 =10　　　5 x 2 =10

X பெருக்கல் குறி

தொடர் கூட்டலின் சுருக்கமே பெருக்கலாகும்.

3 + 3 + 3 + 3	= 4 x 3	= 12
5 + 5 + 5 + 5 + 5 + 5	= 6 x 5	= 30

வகுத்தல்

கமலா, கண்ணன், அன்பு, விஜயன் ஆகிய நால்வரும் பாட்டி வீட்டிற்குச் சென்றனர். பாட்டி 8 லட்டுகளை அவர்களுக்கு சமமாக பகிர்ந்து கொடுத்தார் எனில் ஒருவருக்கு எத்தனை லட்டுகள் கிடைக்கும்?

ஒருவேளை, பாட்டி 8 லட்டுகளை இரண்டு பேருக்குப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவருக்கு எத்தனை லட்டு கிடைக்கும்?

÷ வகுத்தல் குறி

12 ÷ 2 = 6	12 ÷ 4 = 3

DP3KB

பயிற்சிகள்

NI8MI

1. எழுத்தை அடையாளம் காண்க.

1. ஔ ஔடதம் ஔவை ஔவியம்
2. வெ வெற்றி பெட்டி நெல்லி

2. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.

ஔ பௌ வௌ கெ நெ பெ

3. சொல் உருவாக்குக.



1. தாயம் 2. ________ 3. ________ 4. ________ 5. ________

4. விடுகதையைப் படித்து விடை காண்க.

1. பச்சைப் பெட்டியில் முத்துச் சரம்
   எடுத்துப் பார்க்கலாம் – ஆனால்
   தொடுத்துப் போட முடியாது. – அது என்ன? -----------
2. குட்டி போடும். ஆனால் எட்டப் பறக்கும். – அது என்ன? -----------
3. நிலத்தை நோக்கி வருவான்
   நுரையைக் கக்கிச் செல்வான். – அவன் யார்? -----------
4. ஈரப் புடைவைக்காரி இருபத்தெட்டுச் சுற்றுக்காரி. – அவள் யார்? ----------
5. தாளைக் கொடுத்தால் தின்னும் தண்ணீர் கொடுத்தால் மடியும்.
   அது என்ன? ----------

(வௌவால், வெண்டைக்காய், கடல் அலை, வெங்காயம், நெருப்பு)

5. எழுதிப் பழகுக.

வெல்லம் இரும்புச்சத்து மிக்கது

6. பெருக்கல் கணக்குகள்

பொருத்துக.

7 + 7 + 7 + 7 + 7	4 x 9
2 + 2 + 2	5 x 7
4 + 4 + 4 + 4 + 4	3 x 2
9 + 9 + 9 + 9	5 x 4

7. கூட்டல் விவரங்களைப் பெருக்கலாக மாற்றுக.

6 + 6 + 6 + 6 + 6	____
3 + 3 + 3 + 3	____
1 + 1 + 1	____
5 + 5	____

8. வகுத்தல் கணக்குகள்

பூர்த்தி செய்க.

$10 \div 2 =$ ☐ $10 \div 5 =$ ☐ $5 \div 1 =$ ☐

$8 \div 4 =$ ☐ $6 \div 3 =$ ☐

9. விடை காண்க.

1. மணி தன்னிடம் உள்ள 8 மிட்டாய்களைத் தன் நண்பர்கள் இருவருக்குப் சமமாக பகிர்ந்து கொடுத்தால், ஒவ்வொரு நண்பருக்கும் எத்தனை மிட்டாய்கள் கிடைக்கும்?
2. நிர்மலா 20 மரக்கன்றுகளை ஒரு வீட்டிற்கு 2 வீதம் கொடுத்தால் எத்தனை வீடுகளுக்குக் கொடுப்பாள்?

பாடம் 12

அ. நூலகப் பூக்கள்

IG9JW

◌ூ	நூல்	பலூன்	தூரிகை
◌ூ	பூச்சரம்	பூக்கூடை	பூண்டு

நூலகம் செல்வோம். நூல் பல கற்போம்.

பொன்னூஞ்சலில் ஆடினாள். தூளியில் குழந்தை தூங்குகிறது.

தஞ்சாவூர் ஓவியம். தாமரைப்பூ காலையில் மலரும்.

நூ	ணூ	தூ	லூ	னூ	வூ	ஆ
நூ	சூ	டூ	பூ	யூ	ரூ	ழூ

ஆ. வடிவம்

இருபரிமாண வடிவங்களின் பண்புகள், அமைப்புகள்

சதுரம்

			
இந்த அஞ்சல் தலை சதுர வடிவில் உள்ளது.	சதுரம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு நான்கு பக்கங்கள் உண்டு.	இதற்கு நான்கு முனைகள் உண்டு.	நான்கு பக்கங்களும் சமம்.

செவ்வகம்

			
ரூபாய் நோட்டு செவ்வக வடிவில் உள்ளது.	செவ்வகம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு நான்கு பக்கங்கள் உண்டு.	இதற்கு நான்கு முனைகள் உண்டு.	எதிர்ப்பக்கங்கள் சமம்.

முக்கோணம்

			
சாலைக் குறியீடு முக்கோண வடிவில் உள்ளது.	முக்கோணம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு மூன்று பக்கங்கள் உண்டு.	இதற்கு மூன்று முனைகள் உண்டு.	பக்கங்கள் சமமாகவும், சமம் அற்றும் இருக்கும்

வட்டம்

			
நாணயம் வட்ட வடிவில் உள்ளது.	வட்டம் மூடிய வளைவாகும்.		

பயிற்சிகள்

1. எழுத்துகளை அடையாளம் காண்க.

நூ –	நூல்	நூறு	நூதனம்	நூலகம்
பூ –	பூமாலை	பூண்டு	பூவிழி	பூரிப்பு

2. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.

நூ   பூ   தூ   யூ

3. குறிப்புகளைப் படித்து, மலர்களால் கட்டத்தை நிரப்புக.



1. பல வண்ணம் என் சொந்தம். பலருக்கும் என்னைப் பிடிக்கும்.
2. கதிரவனைக் கண்டு மலர்வேன். குளத்தின் நடுவில் நிற்பேன்.
3. இரவில் மலர்வேன். மணத்தைப் பரப்புவேன்.
4. மஞ்சள் நிறத்தில் இருப்பேன். மங்களப் பொருளாய் மணப்பேன்.
5. என்னிடம் மணம் இல்லை. ஆனால், கண்ணைக் கவரும் நிறம் உண்டு.

4. பொருத்தமான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பொன் ―― ஞ்சல் (னூ / ணூ)
2. செம்பருத்திப் ―― (பு / பூ)
3. ―― க்கணாங்குருவி (தூ / து)
4. கல் ―― ரி (லு / லூ)
5. ―― லகம் (நு / நூ)

5. எழுதிப் பழகுக.

நூல் பல கல்

6. வடிவங்களை உற்றுநோக்கிக் கோடிட்ட இடத்தில் தொடர்ந்து வரைக.



பாடம் 13

அ. கூடித் தொழில் செய்வீர்

□ூ	கூரை	கூலி	கூடை
ெ□ா	கொடு	தொழில்	பொடி
□ீ	நீர்	மீதி	தீவு

கூடா நட்பு கேடாய் முடியும்.

நீரின்றி அமையாது உலகு.

கூழானாலும் குளித்துக் குடி.

தீதும் நன்றும் பிறர் தர வாரா.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

கொடுங்கோல் அரசு நெடுங்காலம் அமையாது.

ஆ. அளவைகள்

கண்ணனும் கோபியும் சந்தைக்குச் சென்றனர். சந்தையில் வெவ்வேறு கடைகளில் உள்ள பொருள்கள் மற்றும் அப்பொருள்களை அளவிடும் முறைகள் பற்றியும் கண்டு களித்தனர். கோபி, தன் தங்கைக்கு 2 முழம் பூவும், 1 கூறு கத்தரிக்காயும், 4 முழம் ரிப்பனையும் வாங்கினான். கண்ணன், தன் தம்பி விஷாலுக்கு 500 கிராம் (½ கிலோகிராம்) இனிப்பும் 1½ மீட்டர் (1.மீட்டர் 50சென்டிமீட்டர்) சட்டைத்துணியும், 250 மில்லிலிட்டர் (¼ லிட்டர்) தேனும் வாங்கினான். வரும் வழியில் இருவரும் 2 உழக்கு வேர்க்கடலையும் வாங்கிக்கொண்டனர்.

நீட்டல் அளவை

ஒருகிலோ மீட்டர்	=	1000 மீட்டர்
ஒரு மீட்டர்	=	100 சென்டிமீட்டர்
முக்கால் மீட்டர்	=	75 சென்டிமீட்டர்
அரை மீட்டர்	=	50 சென்டிமீட்டர்
கால் மீட்டர்	=	25 சென்டிமீட்டர்

எடுத்துக்காட்டு –1

ஒரு மீட்டர் துணியின் விலை	=	₹ 136
முக்கால் மீட்டர் துணியின் விலை	=	₹ 102
அரை மீட்டர் துணியின் விலை	=	₹ 68
கால் மீட்டர் துணியின் விலை	=	₹ 34

எடுத்துக்காட்டு –2

ஒரு மீட்டர் கால்சட்டை துணியின் விலை	=	₹ 48
5 மீட்டர் கால்சட்டை துணியின் விலை	=	₹ 48 x 5
	=	₹ 240

பயிற்சிகள்

1. குறியீடுகளை அடையாளம் காண்க.

□ூ	கூடு	கூண்டு	கூரை
ெ□ா	பொடி	தொழுவம்	கொல்லை
□ீ	நீர்	கீரி	மீதி

2. ஒலித்துக்காட்டுக.

கூ	தொ	பொ	மொ	கொ
தீ	நீ	பீ	மீ	யீ

3. எதற்கு எது தேவை? இணைத்துக் காட்டுக.

1. கிளி – முதலுதவி
2. தீக்காயம் – தொழுவம்
3. கூழ் – மேடை
4. கால்நடை – கேழ்வரகு
5. நாடகம் – பொந்து

4. முதல் எழுத்தை மாற்றி படத்திற்குரிய சொல் உருவாக்குக.

1. நாடு ___டு

2. தோட்டம் ___ட்டம்

3. ஈவு ___வு

4. தடி ___டி

5. கோடை ___டை

5. எழுதிப் பழகுக.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

6. நிரப்புக.

ஒரு மீட்டர் துணியின் விலை = ₹ 160 எனில்,

1. அரை மீட்டர் துணியின் விலை = ₹ ____
2. கால் மீட்டர் துணியின் விலை = ₹ ____
3. 1 1/2 மீட்டர் துணியின் விலை = ₹ ____

பாடம்
14

அ. கிரந்த எழுத்துகள் அறிமுகம்

வடமொழி எழுத்தைத் தமிழில் எழுத பயன்படுத்தப்பட்டு வந்த எழுத்து முறைதான் கிரந்த எழுத்து ஆகும்.

ஜ	ஜான்சி	ஜாதகம்	நேதாஜி
ஸ	சர்க்கஸ்	சரஸ்வதி	ஸர்ப்பம்
ஷ	காஷ்மீர்	பாதுஷா	இஷ்டம்
ஹ	ஹிருதயம்	ஹிமாலயா	ஹாஸ்யம்
க்ஷ	சுரக்ஷா	க்ஷணம்	தீக்ஷா
ஸ்ரீ	ஸ்ரீநகர்	ஸ்ரீஹரிகோட்டா	ஸ்ரீதர்

ஷாஜஹான் தாஜ்மஹால் கட்டினார்.

எவரெஸ்ட் மிக உயரமான சிகரம்.

ஜாங்கிரி இனிப்பாக இருக்கும்.

ரோஜாப்பூ எனக்குப் பிடிக்கும்.

ஆ. அளவைகள்

நிறுத்தல் அளவைகள்

ஒருகிலோ	=	1000 கிராம்
முக்கால்கிலோ	=	750 கிராம்
அரைகிலோ	=	500 கிராம்
கால்கிலோ	=	250 கிலோ



காய்கறி விலைகள்

கத்தரிக்காய் 1 கிலோ	=	₹ 15
வெண்டைக்காய் 1 கிலோ	=	₹ 20
உருளைக்கிழங்கு 1 கிலோ	=	₹ 40
முள்ளங்கி 1 கிலோ	=	₹ 30

முகத்தல் அளவை

1 லிட்டர்	=	1000 மில்லி லிட்டர் (1000ml)
½ லிட்டர்	=	500 மில்லி லிட்டர் (500ml)
¼ லிட்டர்	=	250 மில்லி லிட்டர் (250ml)
¾ லிட்டர்	=	750 மில்லி லிட்டர் (750ml)
1 லி பாலின் விலை	=	₹ 40.00
¼ லி பாலின் விலை	=	₹ 10.00
½ லி பாலின் விலை	=	₹ 20.00
¾ லி பாலின் விலை	=	₹ 30.00

பயிற்சிகள்

1. எழுத்துகளை அடையாளம் காண்க.

ஜா	ஜான்சி	ஜாடி	ஜாங்கிரி	ஜானகி
ஸ்ரீ	ஸ்ரீநகர்	ஸ்ரீஹரி கோட்டா	ஸ்ரீதர்	ஸ்ரீரங்கம்

KF2UM

2. படித்துப் பழகுக.

ஷ்	ஷ	ஷா	ஷி
ஹ	ஹா	ஹி	ஹீ

3. படம் பார்ப்போம்; பெயர் எழுதுவோம்.

4. பொருத்தமான எழுத்தினை நிரப்புக

1. ---------- நகர் (ஜீ / ஸ்ரீ)
2. கா ------ மீர் (ஷ் / ஸ்)

5. நிறுத்தல் அளவைப் பயிற்சிகள்

பிரேமா வாங்கிய பொருள்களின் விலைகள்

வெண்டைக்காய் அரைகிலோ = ------------ ₹

உருளைக்கிழங்கு 1 1/2 கிலோ = ----------- ₹

6. முகத்தல் அளவைப் பயிற்சிகள்

1லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை = ₹ 260.00

½ லி தேங்காய் எண்ணெய் விலை = ₹ -------

மதிப்பீடு – 3

1. எழுத்துகளை அடையாளம் காண்க.

நூ –	நூல்	நூறு	நூதனம்	நூலகம்
பூ –	பூமாலை	பூண்டு	பூவிழி	பூரிப்பு

2. குறிப்புகளைப் படித்து, மலர்களால் கட்டத்தை நிரப்புக.

1						
2						
3						
4						
5						

1. பல வண்ணம் என் சொந்தம். பலருக்கும் என்னைப் பிடிக்கும்.
2. கதிரவனைக் கண்டு மலர்வேன். குளத்தின் நடுவில் நிற்பேன்.
3. இரவில் மலர்வேன். மணத்தைப் பரப்புவேன்.
4. மஞ்சள் நிறத்தில் இருப்பேன். மங்களப் பொருளாய் மணப்பேன்.
5. என்னிடம் மணம் இல்லை. ஆனால், கண்ணைக் கவரும் நிறம் உண்டு.

3. பொருத்தமான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பொன் – ஞ்சல் (னூ / ணூ)
2. செம்பருத்திப் –– (பு / பூ)
3. – க்கணாங்குருவி (தூ / து)

4. எதற்கு எது தேவை? இணைத்துக் காட்டுக.

1. கிளி	–	முதலுதவி
2. தீக்காயம்	–	தொழுவம்
3. கூழ்	–	மேடை
4. கால்நடை	–	கேழ்வரகு
5. நாடகம்	–	பொந்து

5. விடுகதையைப் படித்து விடை காண்க.

1. பச்சைப் பெட்டியில் முத்துச் சரம் எடுத்துப் பார்க்கலாம். ஆனால்,

   தொடுத்துப் போட முடியாது. அது என்ன? -----------

2. ஈரப் புடைவைக்காரி இருபத்தெட்டுச் சுற்றுக்காரி. அவள் யார்? ---------

6. பொருத்துக.

7 +7 + 7+ 7 + 7	4 x 9
2 + 2 + 2	5 x 7
4 + 4 + 4 + 4 + 4	3 x 2
9 + 9 + 9 + 9	5 x 4

7. நிரப்புக.

10 ÷ 2 ☐ = ☐ 10÷ 5 =

8. விடை காண்க.

1. மணி, தன்னிடம் உள்ள 8 மிட்டாய்களைத் தன் நண்பர்கள் இருவருக்கும் சமமாக பகிர்ந்து கொடுத்தால், ஒவ்வொரு நண்பருக்கும் எத்தனை மிட்டாய்கள் கிடைக்கும்?

2. நிர்மலா, 20 மரக்கன்றுகளை ஒரு வீட்டிற்கு 2 வீதம் கொடுத்தால் எத்தனை வீடுகளுக்குக் கொடுப்பாள்?

9. நிரப்புக.

1. ஒரு மீட்டர் துணியின் விலை ₹ 160 எனில்,
   அரை மீட்டர் துணியின் விலை ₹ -------.
   கால் மீட்டர் துணியின் விலை ₹ -------.

2. ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை ₹ 260 எனில்,
   ½ லி தேங்காய் எண்ணெய் விலை ₹ -------.

3. பிரபு, ₹300 எடுத்துச் சென்று 1லி. தேங்காய் எண்ணெய் வாங்கினால்

   மீதி அவனிடம் இருக்கும் பணம் ₹ ------------.

பாடம் 15

அ. சட்டமும் திட்டமும் அறிவோம்

ஓய்வூதியம்

கருணை அடிப்படை உதவி காவல்துறை ஊராட்சி நகராட்சி மின்சாரம்

இலவச சட்ட உதவி

காப்பீடு

சான்றிதழ்கள்



சட்டம் என்பது மக்களாகிய நம் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள் மற்றும் நெறிமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும். இவ்வாறான ஒழுங்குபடுத்தல் மூலம் நம் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் நன்மதிப்பையும், சமத்துவத்தையும் அடைவதை உறுதி செய்வதற்கு உதவுவதே சட்டத்தின் நோக்கமாகும். மக்களாகிய நம் வாழ்வில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், உரிமைகளைப் பெறுவதற்கும் பயன்படக்கூடிய சட்டங்களைப் பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

சட்டம்	பயன்பாடு
இலவசக் கல்வி உரிமைச் சட்டம் 2009	1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி வழங்கக் கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.
போக்சோ சட்டம் 2012	பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.
பாலியல் தொல்லைகள் தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2013	பொது இடங்களில், அலுவலங்களில் பெண்களைக் கேலி மற்றும் தொந்தரவு செய்தால் இச்சட்டத்தின்மூலம் தண்டிக்க முடியும்.
இளைஞர் நீதிச் சட்டம்	குழந்தைகள், அறியாமையால் தவறு செய்தால் அவர்களை நல்வழிப்படுத்த இச்சட்டம் பயன்படுத்தப் படுகிறது.
குழந்தைத் திருமணத் தடுப்பு சட்டம்	இச்சட்டம் குழந்தைத் திருமணம் நடைபெறாமல் தடுத்தல் மற்றும் அதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்க கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.
வரதட்சணை தடுப்புச் சட்டம்	திருமணத்திற்கு முன்போ, திருமணத்திற்கு பின்போ பெண்வீட்டாரிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரதட்சணையாக நிதி, மற்றும் பொருள் பெறுவதைத் தடுக்கக் கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.
தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005	நமக்குத் தேவையான அரசுத் துறை சார்ந்த தகவல்களைப் பெற கொண்டு வரப்பட்ட சட்டமாகும். முறையான விண்ணப்பத்தில் எழுதி, உரிய அலுவலருக்கு அனுப்பினால், 30 நாளில் தகவல் கிடைத்துவிடும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்	நாம் கடைகளில் வாங்கும் செய்யப்படும் எந்தவொரு பொருளும் தரமற்றதாக இருந்தாலோ, காலாவதியான பொருளாக இருந்தாலோ, இச்சட்டத்தின் மூலம் நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி அப்பொருளுக்குரிய இழப்பீட்டைப் பெறலாம்.
பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007	பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பது அவர்களுடைய குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகளின் கடமையாகும். மூத்த குடிமக்களின் உடல் நலம், மனநலம் மற்றும் சொத்துகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு, பராமரிப்பு தீர்ப்பாயங்கள் மூலம் நிவாரணம் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

திட்டங்கள்

நமது நாட்டில் பல்வேறுபட்ட மனிதர்கள் பலதரப்பட்ட வாழ்க்கைத் தரங்களில் வாழ்கிறார்கள். அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் நமது அரசு மக்களின் உடல் நலத்தைக் காப்பதற்கும், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. இத்திட்டங்களை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என அறிவோமா?

திட்டங்களின் பெயர்	நிபந்தனைகள்
முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கட்டணமில்லா தொலைபேசி எண் : 18004253993	மருத்துவக் காப்பீட்டுத் திட்ட விண்ணப்பப் படிவத்தைப் (ப.எண்.77) பூர்த்தி செய்து உங்கள் பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலரிடம் கீழ்க்கண்ட சான்றுகளுடன் சமர்ப்பித்து மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை பெற்றுக்கொள்ளவேண்டும். தேவையான சான்றுகள் 1. குடும்ப அட்டை 2. வருமானச் சான்று 3. ஆதார் அட்டை 4. புகைப்படம்
முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம்	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது– 60 மற்றும் அதற்கு மேல். நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையாச் சொத்து ₹100000/– க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவுபெற்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

மாற்றுத் திறனுடையயோர் ஒய்வூதியத்திட்டம்	தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ₹.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். வயது–18 மற்றும் அதற்கு மேல். ஊனம் நிலை–40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்.
இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனுடையோர் ஒய்வூதியத்திட்டம்	வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ₹3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். வயது–18 மற்றும் அதற்கு மேல். ஊனம் நிலை–80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். கடும் அல்லது பலதரப்பட்ட ஊனம் உள்ளவர்கள்.
ஆதரவற்ற திருநங்கைகளுக்கான ஒய்வூதியம் வழங்கும் திட்டம்	40–வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். உடல் ரீதியாக உழைத்துச் சம்பாதிக்க இயலாத திருநங்கையாக இருத்தல் வேண்டும்.
ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஒய்வூதியத்திட்டம்.	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது–30 மற்றும் அதற்கு மேல் சட்டப் பூர்வமாக விவாகரத்து அல்லது 5 ஆண்டுகள் கணவரால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும். அசையாச் சொத்து ₹100000/– க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
ஆதரவற்ற விதவைகள் ஒய்வூதியத்திட்டம்.	ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது–18 மற்றும் அதற்கு மேல், அசையாச் சொத்து ₹100000/– க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
இந்திராகாந்தி தேசிய விதவைகள் ஒய்வூதியத்திட்டம்.	ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கவேண்டும். வயது–40 மற்றும் அதற்கு மேல் அசையாச் சொத்து ₹100000/– க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
ஆதரவற்ற திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஒய்வூதியத்திட்டம்.	ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். வயது–50 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ₹100000/– க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
இந்திராகாந்தி தேசிய முதியோர் ஒய்வூதியத்திட்டம்.	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கவேண்டும். வயது–60 மற்றும் அதற்கு மேல்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்	மணமகள் வயது–18 மற்றும் மணமகன் வயது–21 அதற்கு மேல். கல்வித் தகுதி : குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி / பழங்குடியினர் 5 ஆம் வகுப்பு
ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்	மணமகள் வயது–18 மற்றும் மணமகன் வயது–21 அதற்கு மேல் கல்வித் தகுதி : இல்லை. ஆண்டு வருமானம் : ₹72,000/– விண்ணப்பங்களைத் திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கவேண்டும்.
டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்	மணமகள் வயது–20 மற்றும் மணமகன் வயது–40 (அதிகபட்சம்) கல்வித் தகுதி : இல்லை
அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்	மணமகள் வயது–18 மற்றும் மணமகன் வயது–21 அதற்கு மேல் கல்வித் தகுதி : இல்லை விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கவேண்டும்.

வாக்களிப்பது நமது கடமை:

மேற்குறிப்பிட்டுள்ள சட்டங்களையும் திட்டங்களையும் இயற்றுவதும் மக்களாகிய நாம் பயன்பெற நிறைவேற்றுவதும் மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் ஆகும். இத்தகைய நல் அரசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மற்றும் கடமை நம்மிடம் மட்டும் உள்ளது. எனவே, தேர்தல் வரும்போது நாம் அனைவரும் வாக்குச் சாவடிக்குச் சென்று நமக்கான வாக்கினைப் பதிவு செய்வது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

உயில் எழுதும்போது கவனிக்க வேண்டியவை:

தன்னுடைய சுய சம்பாத்தியத்தில் சம்பாதித்த சொத்துக்கு மட்டுமே உயில் எழுதி வைக்க முடியும். தன்னுடைய தந்தை வழியில் வந்த பூர்வீக சொத்துக்கு உயில் எழுதி வைக்கமுடியாது.

ஒருவர் சுய சம்பாத்தியத்தில் சேர்த்து வைத்த சொத்தைத் தன்னுடைய வாரிசுகளுக்கு உயில் எழுதிவைப்பதாக இருந்தால் மனைவியையும் ஒரு பங்குதாரராக சேர்த்து உயில் எழுதுவது நல்லது.

சொத்தின் வாரிசுகள் யார் என்பதை விவரமாகவும் அவர்கள் ஏன் வாரிசுகளாக அறிவிக்கப்படுகிறார்கள் என்கிற காரணத்தையும் எழுத வேண்டும்.

சொத்து பற்றிய விவரங்களைக் குறிப்பிடும்போது அவை எங்கு உள்ளன. எவ்வளவு பரப்பு என்பதையும் விரிவாக எழுதவேண்டும்.

உயிலைப் பதிவு செய்வது கட்டாயமில்லை இருந்தாலும் இரண்டு சாட்சிகளோடு சார்பதிவாளர் முன்னிலையில் உயிலைப் பதிவு செய்வதால் அதற்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கும். குடிபோதையில் அல்லது மனநிலை சரியில்லாத நிலையில் எழுதிய உயில் சட்டப்படிச் செல்லுபடி ஆகாது. மேலும் மைனர்கள் எழுதும் உயிலுக்கும் மதிப்பு இல்லை.

ஒருவர் பல உயில்கள் எழுதலாம். அப்படி ஒன்றுக்கும் மேற்பட்ட உயில்கள் ஒரே சொத்துக்கு இருக்குமாயின் எந்த உயில் கடைசியாக எழுதியதோ அதுவே செல்லுபடியாகும்.

ஒருவர் தான் எழுதிய உயிலை எப்போது வேண்டுமானாலும் மாற்றி எழுத முடியும்.

ஆ. காலம் – கடிகாரம் பார்த்து நேரம் கூறுதல்

பெரிய முள், நிமிட முள் ஆகும். சிறிய முள், மணி முள் ஆகும்.

சிறியமுள் 3 இல் உள்ளது. பெரியமுள் 12 இல் உள்ளது. எனவே, நேரம் 3மணி ஆகும்.

கடிகாரத்தில் 1 முதல் 12 வரை எண்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

12 மணிநேரம் – 24 மணிநேரம்



 காலை (முற்பகல்) 4.00 மணி	 மாலை (பிற்பகல்) 4.00 மணி

மேலே உள்ள இரண்டு கடிகாரங்களும் 4 மணியைக் காண்பிக்கின்றன.

நள்ளிரவு முதல் நண்பகல் வரை 12 மணி நேரம் (00.00 முதல் 11.59 வரை)
நண்பகல் முதல் நள்ளிரவு வரை 12 மணி நேரம் 12..00 முதல் 23.59)

21 : 17
12 : 00
9 : 17

24 மணி நேர கடிகாரத்தில் நேரம்–மணி, நிமிடம் கணக்கிடல்

இங்கு 21 மணி 17 நிமிடம் என்பதை 12 மணிநேர கடிகாரத்தில் எவ்வாறு காண்பது
12 மணி நேர கடிகாரத்தில் நேரம் 9 மணி 17 நிமிடம் (பிற்பகல்)

பயிற்சிகள்

1. **கீழ்க்காணும் சட்டங்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.**
    1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
    2. இளஞ்சிறார் சீர்திருத்தச் சட்டம்.
    3. வரதட்சணை தடுப்புச் சட்டம்.

4. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம்.

5. வாக்களிப்பது நம் உரிமையும் கடமையும் ஆகும்.

6. பதினெட்டு வயது நிரம்பியவர்கள் வாக்களிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

7. ஓட்டுப் போடுவதற்கு அடையாளமாக விரலில் மை வைக்கப்படும்.

8. எழுத, படிக்கக் கற்றுக் கொள்வதற்கு வயது தடையில்லை.

9. வயது வந்தோர் கல்வித் திட்டம், கல்வி கற்க உதவுகிறது.

2. பொருத்துக.

1. இலவசக் கல்வி உரிமைச் சட்டம்	–	அ) 2013
2. போக்சோ சட்டம்	–	ஆ) 2005
3. தகவல் அறியும் உரிமைச் சட்டம்	–	இ) 2012
4. பாலியல் தொல்லை மற்றும் தடுப்புச் சட்டம்	–	ஈ) 2009

3. பின்வரும் தொடர்களைப் படித்துச் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றமாகும். ☐

2. 1 முதல் 8 வகுப்புவரை இலவசமாகக் கல்வி பெறலாம். ☐

3. குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பது, போக்சோ சட்டம். ☐

4. குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்ய சட்டம் இல்லை. ☐

5. நுகர்வோரின் நலம் காப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம். ☐

4. பின்வரும் நிகழ்வைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.

கண்மணி, உணவு உண்டாள். சிறிதுநேரத்திற்குப் பின் வயிறு வலிப்பதாக உணர்ந்தாள். அதனால், அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றாள். மருத்துவர், குறிப்பிட்ட ஒரு மருந்தை, மருந்துச்சீட்டில் எழுதித் தந்தார். கண்மணி, மருந்தகத்திற்குச் சென்றாள். மருந்துக் கடைக்காரர், அந்த மருந்து இல்லாததால், வேறு ஒரு மருந்தை மாற்றிக் கொடுத்தார். இதை அறியாத கண்மணி, அந்த மருந்தைச் சாப்பிட்டாள். வயிற்று வலி மேலும் கடுமையானது. வலி தாங்கமுடியாமல், மீண்டும் அதே மருத்துவரிடம் சென்றாள். அவள் சாப்பிட்ட மருந்தை வாங்கிப் பார்த்தார் மருத்துவர். அது, அவர் எழுதித் தந்த மருந்து இல்லை. அதனால், மருந்துக் கடைக்காரர் செய்த தவற்றைக் கண்மணியிடம் மருத்துவர் கூறினார்.

வினாக்கள்

1. கண்மணிக்கு என்ன நேர்ந்தது?
2. கண்மணி யாரைப் பார்க்கச் சென்றாள்?
3. கண்மணிக்கு வயிற்றுவலி ஏன் கடுமையானது?
4. கண்மணியின் குறை தீர்ப்பதற்கு எந்தச் சட்டம் உதவும்?
5. தனக்கு ஏற்பட்ட நிலைமைக்காகக் கண்மணி யார்மீது வழக்குத் தொடுக்கலாம்?

5. மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக.

6. கொடுக்கப்பட்டுள்ள நேரத்தைக் காட்ட கடிகாரங்களில் முட்களை வரைக.



11 மணி | 1 மணி | 5 மணி | 7 மணி | 6 மணி

7. வாக்காளருக்கான பெயர் சேர்ப்புக்கான விண்ணப்பத்தில் தேவைப்படும் தகவல்களை நிரப்புக.

பெயர்	------------------------
வயது	------------------------
பிறந்த தேதி	------------------------
பாலினம்	------------------------
வீட்டு முகவரி	------------------------

8. பின்வரும் பயிற்சிகளைச் செய்க.
   1. 20 மணி 20 நிமிடம் என்பதன் 12 மணி நேர கடிகாரத்தில் கூறவும்.
   2. பிற்பகல் 5 மணி 15 நிமிடம் என்பதை 24 மணி நேரமாக எழுதவும்.

- நேரத்தை 12 மணி நேரமாக மாற்ற 24 மணி நேரத்திலிருந்து 12 ஐக் கழிக்கவேண்டும்.
- நேரத்தை 24 மணி நேரமாக மாற்ற 12 மணி நேரத்துடன் 12 ஐக் கூட்டவேண்டும்.

மருத்துவ காப்பீட்டுத் திட்ட விண்ணப்ப படிவம்

DATE :

Laptop No. | | | | | | | | |　　Card ID No. | | | | | | | | | | |

தேதி :　　குடும்ப அட்டை அவசியம்

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

(ஆண்டு வருமானம் ரூபாய் 1,20,000/- குறைவானவர்களுக்காக மட்டும்)

1. குடும்பத் தலைவர் பெயர் :
2. தகப்பனார் / கணவர் பெயர் :
3. ஆண் / பெண் :　　பிறந்த தேதி / வயது :
4. தொழில் :
5. குடும்ப அட்டை எண் (Ration Card No.) : .... (Ration Shop No.) :..............................
6. ஆதார் அட்டை எண் (Aadhar Card No.) :..............................
7. நிரந்தர முகவரி : கதவிலக்கம்/தெரு ....
   ஊர் ....
   வட்டம் ....
   மாவட்டம் ....
   தபால் குறியீட்டு எண் (Pin Code) .... கைபேசி எண்..............................
8. குடும்ப உறுப்பினர்கள் விவரம்

வ. எண்.	உறுப்பினர் பெயர்	ஆண்/பெண்	வயது	உறவு முறை

9. ENROLMENT REG.NO : ....

இது நாள் வரை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்யவில்லை என உறுதி அளிக்கிறேன்.

உறுப்பினர் கையொப்பம் / இடது கை பெருவிரல் ரேகை

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் சான்றிதழ்

திரு திருமதி .... மேற்குறிப்பிட்டுள்ள தம் குடும்ப உறுப்பினர்களுடன் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறார். அவருடைய குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் .... /- (ரூபாய் .... மட்டும்) என்று சான்றளிக்கிறேன்.

சான்றளிப்பவரின் பெயர் மற்றும்
அலுவலக முத்திரை　　கையொப்பம்

இலவச தொலைபேசி எண் : **1800 425 3993**

E-mail : tnhealthinsurance@gmail.com, cmchistn@yahoo.com Website : http//:cmchistn.com

SmartCard and Technology powered by MSP & Eagle Software

இந்த விண்ணப்பம் விற்பனைக்கு அல்ல

ENROLMENT NUMBER AT THE TIME OF REG. :　　DATE :

DATE OF REGISTRATION :

RATION CARD NO :　　SHOP NO :

NAME OF THE HEAD OF THE FAMILY :

VILLAGE NAME :　　TALUK NAME :

DISTRICT NAME :

பாடம் 16

அ. நம் தொழில்.. நம் வளர்ச்சி

பசுமைத் தோட்டம்

"அடடே, மணியா! வா, வா. எப்போது ஊரிலிருந்து வந்தாய்? நலமா?" என்றான் பிரபு.

நண்பனைப் பார்த்ததும், தன் இருசக்கர வண்டியை நிறுத்திவிட்டு, அருகில் வந்தான் மணி.

"ரொம்ப நல்லாயிருக்கேன் பிரபு. நீ எப்போது ஊருக்கு வந்தாய்? உன் வேலையெல்லாம் எப்படிப் போகிறது?" என்றான் மணி.

"உனக்குத்தான் தெரியுமே, எங்க அப்பாவோட மளிகைக் கடையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது சரி, மணி. இது என்ன, புது வண்டியா? நல்லாயிருக்கே" என்றான் பிரபு.

"ஓ! இந்த வண்டியா? வாங்கி 3 மாதம் ஆகிறது நண்பா, என் தொழிலுக்குத் தேவைப்படுகிறது" என்றான் மணி.

"தொழிலா? ஊர்ல பார்த்த வேலை என்னாச்சு மணி?" என்றான் பிரபு.

"குடும்பத்தைப் பிரிந்து வெளியூரில் வாழ்வது சங்கடமாக இருக்கிறது. அம்மாவிற்கும் வயசாகுது. நான்கூடவே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். என் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டு கூடுதல் பளுவைச் சுமக்கிறார்கள்" வருத்தத்துடன் சொன்னான் மணி.

"அதுசரி, அப்படியென்றால், உன் குடும்பத்தை நீ நகரத்துக்கே அழைத்துக்கொண்டு போகலாமே?" என்றான் பிரபு.

"இல்லை நண்பா. பசு மாடுகளும் ஆடுகளும் இருக்கின்றன. அவை மட்டுமில்லாமல் தோட்டம் வேறு இருக்கிறது. அம்மா இவற்றையெல்லாம் விட்டுவிட்டு வரமாட்டாங்க. அம்மாவைத் தனியாகக் கிராமத்தில் இருக்கச் சொல்லவும் மனசில்லே"...என்றான் மணி.

"அதனால, ஊர்ல பார்த்துக்கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டாயா?" என்று வியப்புடன் கேட்டான் பிரபு.

"ஆமாம், பசுவின் பாலும் அதன் பயனாகிய தயிரும் எங்கள் தேவையை ஈடுசெய்கின்றன. ஆடு, மாடு இவற்றின் சாணம் தோட்டத்துக் காய்கறிச் செடிகளுக்கு உரமாகிறது" என்ற மணியிடம், "ஆமாம், தெரியுமே" என்றான் பிரபு.

"அதனால் அம்மாவும் மனைவியும் நான் இங்கேயே இருக்க வேண்டும் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு, ஒரு யோசனை சொன்னார்கள்"! என்று மணி கூற,

"அப்படியா? அது என்ன யோசனை?" என்று கேட்டான் பிரபு.

"நூறுநாள் வேலைத் திட்டத்திற்கு அம்மா சென்றபோது, அங்கு மகளிர் சுயஉதவிக் குழு நடத்தும் பூர்ணிமா அக்காவிடம் கலந்து பேசியிருக்காங்க. மாடுகள் வாங்கிப் பால் வியாபாரம் செய்யப் போவதாகச் சொல்லி இருக்காங்க. அக்கா, சரி. கடனுக்கு நான் உதவுகிறேன்னு சொல்லவும் அம்மா என்னிடம் கலந்து பேசி, பால் வியாபாரம் செய்யலாமா? என யோசனை கூறினார்கள்" என்று கூறினான் மணி.

"அதுசரி, நீ என்ன முடிவு செய்தாய்?" என்று ஆவலுடன் கேட்டான் பிரபு.

"எனக்கும் சரியெனப்பட்டது. ஒரு பால் பண்ணை தொடங்கி, இப்போது நன்றாகப் போகிறது. பால்பண்ணையின் அருகில் உள்ள தரிசு நிலத்தில் பழ மரக்கன்றுகளை வளர்த்து வருகிறேன்; மேலும் கால்நடைகளின் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றி

சத்தான காய்கறிகளைப் பயிரிட்டு வருகிறேன். இதிலிருந்து கிடைக்கும் காய்கறிகளை அருகில் உள்ள உழவர் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கிறது" என்று கூறினான் மணி.

"பரவாயில்லை, நல்ல முடிவுதான். சரி, இப்போது எங்கே கிளம்பிவிட்டாய்?" என்று கேட்ட பிரபுவிடம்,

"நகரத்து உணவகம் ஒன்றில் நாளொன்றுக்கு 25 லிட்டர் பால் வேண்டும் என்று கேட்டதாக அங்கு வேலை செய்யும் மூர்த்தி மாமா சொன்னார். அதற்காக உணவக முதலாளியைச் சந்திக்கச் செல்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினான் மணி.

"நல்லது நண்பா, உண்மையில் உன்னை நினைத்துப் பெருமையாகவும் மகிழ்வாகவும் உணர்கிறேன்" என்றான் பிரபு.

"போய் வருகிறேன் பிரபு" என்றவாறே தன் இரு சக்கர வண்டியை நகர்த்தினான் மணி.

ஆ. வாரத்தின் நாள்கள்

வாரத்திற்கு ஏழு நாள்கள்

ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி
சனி

2022 நாள் காட்டி

ஜனவரி

S	M	T	W	T	F	S
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

பிப்ரவரி

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28					

மார்ச்

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

ஏப்ரல்

S	M	T	W	T	F	S
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

மே

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

ஜூன்

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

ஜூலை

S	M	T	W	T	F	S
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

ஆகஸ்ட்

S	M	T	W	T	F	S
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

செப்டம்பர்

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

அக்டோபர்

S	M	T	W	T	F	S
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

நவம்பர்

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

டிசம்பர்

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஆங்கில மாதங்கள்

ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்

SV6KZ

30 நாள் கொண்ட மாதங்கள்	ஏப்ரல், ஜூன், செப்டம்பர், நவம்பர்
31 நாள் கொண்ட மாதங்கள்	ஜனவரி, மார்ச், மே, ஜூலை, ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர்
28 அல்லது 29 நாள் கொண்ட மாதம்	பிப்ரவரி

பருவங்கள்

கோடைக்காலம், மழைக்காலம், குளிர்காலம்

கோடைக்காலம் மார்ச் ஏப்ரல் மே ஜூன்	
மழைக்காலம் ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் அக்டோபர்	
குளிர்காலம் நவம்பர் டிசம்பர் ஜனவரி பிப்ரவரி	

பயிற்சிகள்

1. **பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. வளர்ச்சி
2. வெளியூர்
3. நூறு நாள் வேலை
4. பால் பண்ணை
5. முதலாளி
6. புது வண்டி
7. காய்கறி
8. மகளிர் சுய உதவிக்குழு
9. உணவகம்
10. இருசக்கர வண்டி

2. பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.

1. ஊரிலிருந்து வந்தவர்

அ) மணி ஆ) பிரபு இ) மணியின் அம்மா

2. மணி, தான் பார்த்த வேலையை விட்டுவிட்டு ஊருக்கு வரக் காரணம்

அ) வேலை கடுமையாக இருந்ததால்

ஆ) குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்ததால்

இ) ஊதியம் குறைவாக இருந்ததால்

3. மணி தொடங்கிய சுயதொழில்

அ) தையல் தொழில் ஆ) சிற்றுண்டி உணவகம் இ) பால் பண்ணை

4. நகரத்து உணவகத்துக்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் பாலின் அளவு

அ) 5 லிட்டர் ஆ) 25 லிட்டர் இ) 15 லிட்டர்

5. மகிழ்ச்சி என்பதைக் குறிக்கும் வேறு சொல்

அ) துன்பம் ஆ) வருத்தம் இ) இன்பம்

3. பின்வரும் கட்டங்களில் விடுபட்ட எழுத்தை நிரப்புக.

		பு		
		து		
உ	ண		க	ம்
		ண்		
		டி		

சு				
ய				
உ				
த				
	யா	பா	ர	ம்

4. நாள்காட்டியில் குறிப்பிட்ட நாள்களைக் குறித்தல்

1. காந்தி ஜெயந்தி எந்த நாளில் குறிப்பிடப்பட்டுள்ளது?
2. அக்டோபர் 2022 மாதத்தில் வரும் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமை எந்தத் தேதியில் உள்ளது?
3. APJ அப்துல்கலாம் பிறந்தநாள் எந்தத் தேதியில் வரும்?
4. அக்டோபர் 2022இல் மொத்தம் எத்தனை நாள்கள் உள்ளன?

தமிழ் மாதங்கள்

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

ஆங்கில மாதங்கள்

1. ஜனவரி
2. பிப்ரவரி
3. மார்ச்
4. ஏப்ரல்
5. மே
6. ஜூன்
7. ஜூலை
8. ஆகஸ்ட்
9. செப்டம்பர்
10. அக்டோபர்
11. நவம்பர்
12. டிசம்பர்

பாடம் 17

அ. உடல்நலம் காப்போம்



கட்டடத்திற்கு நல்ல அஸ்திவாரம், கப்பலுக்கு கலங்கரை விளக்கம், வண்டிக்கு அச்சாணி தேவைபடுவது போல, மனிதனுக்கும் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவ பெரிதும் உதவுவது உடல் நலமே. சமையல் சரியில்லைன்னா ஒரு நாள் துன்பம். அறுவடை சரியில்லைன்னா நான்கு மாதம் துன்பம். படிப்பு சரியில்லைன்னா ஒரு வருடம் துன்பம். ஆனால், உடம்பு சரியில்லைன்னா ஆயுள் முழுவதும் துன்பம். ஒவ்வொருவருக்கும் இறைவன் கொடுத்த இனிய வாழ்க்கையில் உடல் என்பது ஒரு அதிசயம்.

உடல் உறுப்புகளின் குறைபாடு, பலவீனம் போன்ற பல நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாப்பது இன்று சவாலாக உள்ளது. நோயற்ற வாழ்விற்கு நாம் கடைப்பிடிக்கவேண்டியவை உடற்பயிற்சியும் நல்ல உணவுப்பழக்கமும்தான்.

ஆரோக்கிய வாழ்வின் அவசியத் தேவைகள்

சரிவிகித உணவின் தேவை

புரோட்டின், கொழுப்பு, வைட்டமின்கள்,தாதுப்பொருட்கள், மாவுச் சத்து, நார்ச்சத்து போன்ற எல்லாம் கலந்த உணவைச் சரிவிகித உணவு எனலாம்.

தவிர்க்கவேண்டியவை :

போதைப் பொருட்களான மது, புகைபிடித்தல், குட்கா வகைகள், போதை மருந்து போன்றவற்றை முற்றாகத் தவிர்க்கவேண்டும். துரித உணவு வகைகள் (fast food), ஐஸ்கிரீம், சாக்லேட் செயற்கைக் குளிர்பான வகைகள் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இதில் பதப்படுத்தப் பயன்படும் வேதிப்பொருட்கள், உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும்.வனஸ்பதி போன்ற சுத்திகரிக்கப்பட்ட உணவுகளையும் (Refined Foods) வெள்ளை மைதா போன்ற மிகச் சுத்திகரிக்கப்பட்ட (Processed food) வைகளையும் குறைத்துக்கொள்வது நல்லது. ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயைப் பலமுறை பயன்படுத்தக்கூடாது.

எளிய உடற்பயிற்சி :

உலகில் ஐந்து சிறந்த மருத்துவர் யாவரெனில், சூரிய வெளிச்சம், உடற்பயிற்சி, அளவான மற்றும் சத்தான உணவு, ஓய்வு, தன்னம்பிக்கை ஆகியவையாகும். எத்தனையோ உடற்பயிற்சிகள் இருந்தாலும், எல்லோரும் பின்பற்றக்கூடிய எளிதான உடற்பயிற்சி நடைப்பயிற்சி. அதனால் தான் நடைப்பயிற்சியை உடற்பயிற்சிகளின் அரசன் என்கிறார்கள். காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றோடு இந்தப் பயிற்சிகளைச் செய்யவேண்டும். மாலையில் செய்வதாக இருந்தால் கடைசியாகச் சாப்பிட்ட நான்குமணி நேரத்திற்குப் பிறகும், காப்பி, தேனீர் சாப்பிட்ட அரை மணி நேரத்திற்குப் பிறகும் இப்பயிற்சியைச் செய்யவேண்டும்.

எளிய மூச்சுப்பயிற்சி :

சாதாரண நிலையில் அமர்ந்தபின்பு உங்கள் கவனம் முழுக்க முழுக்க மூச்சுக் காற்று மீது மட்டுமே இருக்கவேண்டும். இடப்பக்க மூக்குத்துவாரத்தின் வழியாக மூச்சை உள்ளிழுத்து வலப்பக்க மூக்குத்துவாரத்தின் வழியாக வெளிவிடுவதும், வலப்பக்க மூக்குத்துவாரத்தின் வழியாக மூச்சை உள்ளிழுத்து இடப்பக்க மூக்குத்துவாரத்தின் வழியாக வெளிவிடுவதும் எளிய மூச்சுப் பயிற்சி என்று சொல்லலாம். இப்படி மூச்சை உள்ளிழுக்கும்போதும், வெளிவிடும்போதும் மற்ற துவாரத்தை மூடிக்கொள்ளவேண்டும். ஒரு துவாரம் வழியாக மட்டுமே மூச்சு விடுதலும்,மூச்சு உள்ளிழுத்தலும் நடைபெற வேண்டும்.

நுரையீரலுக்குக் காற்று தடையின்றிச் செல்வதால் சைனஸ், ஆஸ்துமா பிரச்சனைகளால் அவதிப்படுபவர்கள் நிவாரணம் அடைவார்கள். நீரிழிவு, மலச்சிக்கல், இரத்த அழுத்தப் பிரச்சனைகளை வராமல் காப்பதிலும், வந்தவர்கள் செய்யும்போது கட்டுப்படுத்துவதிலும் இந்த மூச்சுப்பயிற்சி உறுதுணையாக இருக்கும். உடலுக்குத் தேவையான புத்துணர்ச்சியை உண்டாக்குகிறது. மூளையில் சுரக்கும் வலது மற்றும் இடது ஹார்மோன்கள் நன்றாக வேலை செய்ய உதவுகிறது.உடல் வெப்பநிலையைச் சீராக்குகிறது.

கைப்பயிற்சி :

1. சாதாரணமாக நிற்பதுபோல் இரண்டு பாதங்களுக்கிடையில் அரைஅடி இடைவெளி இருக்குமாறு நின்றுகொண்டு, இரண்டு கைகளையும் தலைக்கு மேல் முழுவதும் உயர்த்திக் காதோடு ஒட்டியவாறு இரு உள்ளங்கைகளையும் சேர்த்துவைத்த நிலையில், இயல்பாக நான்கு முறை மூச்சை இழுத்துவிடவும்.பின்னர் இரண்டு கைகளையும் சாதாரண நிலையில் தொங்கவிட்ட நிலையில் இயல்பாக இரண்டு முறை மூச்சை இழுத்துவிடவும். மேலே கூறியவாறு மூன்று முறை செய்யவும்.

2. இரண்டு கைகளையும் தோள்மட்டத்திற்குப் பக்கவாட்டில் விரித்துவைத்து மூச்சை இழுத்துக்கொள்ளவும், பின்னர் இரு கைகளையும் மூச்சை விட்டுக்கொண்டே மார்புக்கு நேராக இரண்டு உள்ளங்கைகளையும் ஒன்று சேர்த்துக் கொள்ளவும். கைகளை விரிக்கும்போது மூச்சை இழுக்கவும். குவிக்கும்போது மூச்சை விடவும் வேண்டும். இதுபோன்று ஐந்துமுறை செய்யவேண்டும்

கால் பயிற்சி :

1. இரண்டு பாதங்களையும் சுமார் 1 1/2 அடி இடைவெளியில் அகற்றியவாறு அமர்ந்துகொண்டு கைகளைப் பின்புறமாக ஊன்றிக்கொள்ளவும். இரண்டு கால்களையும் பெரு விரல் தரையைத் தொடுமளவில் உட்புறமாகக் குவிக்கவும். பின்பு மறுபடியும் பக்கவாட்டில் பாதங்கள் முழுவதும் தரையைத் தொடுமளவு விரிக்கவும். இதுபோல் ஐந்துமுறை செய்யவும்.

2. முன்பு செய்ததுபோல் உட்கார்ந்த நிலையில் இரண்டு பாதங்களையும் சுமார் ஒரு அடி இடைவெளியில் வைத்துக்கொள்ளவும். ஒரே சமயத்தில் இரண்டு பாதங்களையும் வலப்புறமகவும், பின் இடப்புறமாகவும் பாதங்கள் முழுவதும் பக்கவாட்டில் தரையில் படியுமாறு வலப்புறமும், இடப்புறமும் மாற்றி மாற்றி அசைக்கவும். இதுபோல் ஐந்துமுறை செய்யவும்.

கண்பயிற்சி :

1. ஒரு விரிப்பின்மீது அமர்ந்துகொள்ளவும். இரண்டு கைப்பெருவிரல்களையும் மேல் நோக்கியவாறு இணைத்து வைத்துக்கொண்டு மற்ற விரல்களைக் கோர்த்துக்கொள்ளவும்.

2. பெரு விரல் நகங்கள் சேருமிடத்தில் பார்வையை நிலையாக வைத்துக்கொள்ளவும், கைகளை வலப்புறத்துக் கோடிவரைக்கும், பின் இடபுறத்துக் கோடிவரைக்கும் அரை வட்டம்போல கொண்டுசெல்லவும். பயிற்சியின்போது கண்கள் வலது கோடிக்கும் இடதுகோடிக்கும் செல்லவேண்டும். இதுபோல் ஐந்துமுறை செய்யவும்.

3. இரண்டு கைகளையும் கோர்த்த நிலையிலேயே தொடைமீது வைத்து மேல் நோக்கி பெருவிரல் நக இணைப்பின்மேல் பார்வையை நிலையாக வைத்துக்கொண்டு

தலைக்கு நேர் மேலேயும் கீழே தொடைவரையிலும் கைகளைக் கொண்டுவரவும். இதுபோல் ஐந்துமுறை செய்யவும்

புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீமைகள்

புகைப் பிடித்தல் மற்றும் புகையிலைப் பொருட்களால் மட்டுமே அதிகப்படியான உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. ஒரு வருடத்தில் புகைப் பிடிப்பதால் மட்டுமே இந்தியாவில் சுமார் 8,00,000 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. புகைப் பிடிப்பதால் தனி மனிதனுக்கு மட்டுமல்லாமல், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கும் பாதிப்பை எற்படுத்துகிறது.

புகைப் பிடிக்கும் பொழுது சிறிய அளவு நிகோடின் நுரையீரலுக்கு சென்று உடனடியாக இரத்தத்தில் கலந்து அடுத்த 10 வினாடிக்குள் மூளையைச் சென்றடைந்து அடுத்த 5 முதல் 10 வினாடிக்குள் உடலின் எல்லா பாகத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. காற்றில் உள்ள நச்சுப்பொருட்கள் நுழைந்துவிடாமல் தடுக்கும் பணியைச் செய்யும் சிலியா என்னும் நுண்ணிழைகளை சிகரெட் புகையிலிருந்து வெளிப்படும் வெப்பம் அழித்துவிடுகிறது.

சிகரெட்டினால் ஏற்படும் பின்விளைவுகள்

ருசி மற்றும் நுகரும் உணர்வு குறைதல்,தொடர்ந்து இருமல் மற்றும் சளி, சிறுவயதிலேயே முகச் சுருக்கம், வாய்துர் நாற்றம், பற்களில் கறை, பசியின்மை, இரத்தக் கொதிப்பு மற்றும் இருதயப் பிரச்சனை, மூச்சுத் திணறல் போன்ற நோய்களில் 10 பேரில் 1 இளம் வயதினர் இறக்கின்றனர்.

உடல் உறுப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்

மூளை : தூக்கமின்மை, எரிச்சல் மற்றும் பக்கவாதம்

கண் : கண் புரை

தோல் : சிறு வயதிலேயே சுருக்கம் ஏற்படுதல்.

புகைப் பழக்கம் உள்ளவருடன் இருப்பதால் புகைப் பழக்கம் இல்லாதவர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள்

புற்று நோய் உட்பட பல நோய்களுக்குக் காரணமான பொருட்கள் சிகரெட் புகையிலையில் இருப்பதால், புகைப்பவரின் அருகில் இப்பழக்கம் இல்லாதவர்கள் இருந்தால், அவர்களுக்கும் இந்த நோய்கள் வரக்கூடிய ஆபத்து உண்டு. இருதயக் கோளாறு, மூச்சுத்திணறல், பக்கவாதம் போன்ற பிற நோய்களாலும் பாதிக்கப்படுவர்.

உணவே மருந்து

மருந்தாகும் உணவுப்பொருள்	–	மருத்துவக் குணம்
கீழாநெல்லி	–	மஞ்சள் காமாலை
செம்பருத்தி	–	இதயக் கோளாறு நீக்கும்
கேரட்	–	கண் பார்வை
வேப்பிலை	–	அம்மை நோய் எதிர்ப்பு
மஞ்சள்	–	கிருமி நாசினி
முருங்கை	–	இரும்புச் சத்து
கரிசலாங் கண்ணி	–	கண்பார்வை
பொன்னாங்கண்ணி	–	கண்பார்வை
அகத்திக்கீரை	–	வயிற்றுப் புண்
வெந்தயம்	–	உடல்சூடு குறைக்கும்
மணித்தக்காளி	–	வயிற்றுப் புண், வாய்ப்புண் நீக்கும்
தூதுவளை	–	சளியை நீக்கும்

ஆ. பயணச்சீட்டு – வாங்குதல் (உரியகட்டணம் செலுத்துதல், மீதிப்பணம் பெறுதல்)

மணி மற்றும் அவருடைய குடும்பத்தினர் சென்னை எழும்பூரிலிருந்து தொடர்வண்டியில் மாம்பலம் வரை செல்ல, பயணச்சீட்டு வாங்குவதற்குத் தொடர்வண்டி நிலையத்திற்குச் சென்றனர். அவர், ஐந்து பயணச்சீட்டுகள் வாங்கினார். ஒரு பயணச்சீட்டுக்கான கட்டணம் ₹5 ஆகும். ஐந்து பயணச்சீட்டுக்கான கட்டணம் ₹25 ஆகும். அவர் ₹ 100ஐ செலுத்தினார். மீதி ₹75ஐ பெற்றுக்கொண்டார்.



பயிற்சிகள்

1. தொடர்வண்டி முன்பதிவு பயணச்சீட்டு

பயணம், நேரம் கணக்கிடுதல் பெட்டி, இருக்கை எண், தூரம், நேரம் பயணச்சீட்டு படம்

பயணிகள் பெயர் பதிவு எண் (PNR Number) 446–4391519	வண்டி எண்	தேதி	கி.மீ	பெரியவர்கள்	சிறியவர்கள்	பயணச்சீட்டு எண்
	12694	18.9.22	514	2	0	98473342

வகுப்பு படுக்கை வசதி	முன்பதிவு – இருந்து வரை திருமங்கலம் சென்னை எழும்பூர்

பெட்டி	இருக்கை எண்	படுக்கை	இனம்	வயது	மொத்தம்
எஸ் 9	57	கீழ்ப்படுக்கை	ஆண்	63	415
எஸ் 9	60	கீழ்ப்படுக்கை	பெண்	59	

வண்டியின் பெயர்	ஏறுமிடம்	புறப்படும் நாள்	நேரம்	வருகை நாள்	நேரம்
முத்துநகர் விரைவு வண்டி	திருமங்கலம்	18.9.22	22.16	19.9.22	07.44

1. வண்டியின் எண் என்ன?
2. இந்தப் பயணச்சீட்டில் எத்தனை பெரியவர்கள் வண்டியில் பயணிக்கின்றனர்?
3. பயணிக்கும் வண்டியின் பெட்டி (கோச்) எண்ணைக் குறிப்பிடுக.
4. பயணிகள் எங்கிருந்து, எதுவரை பயணம் செய்கின்றனர்?
5. வண்டி வந்துசேரும் நாள் மற்றும் நேரத்தைக் குறிப்பிடுக.
6. வண்டியின் பெயரைக் குறிப்பிடுக?

2. பின்வரும் தொடர்களைப் படித்துக் காட்டுக.

1. உடல்நலம் காக்கும் உணவுகளை உண்ணவேண்டும்.
2. துரித வகை உணவுகள், உடல் நலத்திற்குத் தீங்கு செய்யும்.
3. வண்ணப் பொருள்கள் சேர்க்கப்பட்ட உணவுகள் வயிற்றுக்குக் கெடுதல் செய்யும்.
4. நாம் சுவைக்காக உணவு உண்ணுதல் கூடாது.
5. இயற்கை உணவுகளே நம் உடலுக்கு மருந்தாகவும் அமைகின்றன.

3. பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.

1. உணவே மருந்து
2. அறிவுரை
3. உடல்நலம்
4. கலப்படம்
5. தட்பவெப்ப நிலை
6. உணவுப்பொருள்
7. ஊட்டச்சத்து
8. தானியங்கள்
9. பாரம்பரிய உணவு
10. உடற்பயிற்சி

4. பொருத்துக.

1. முருங்கைக் கீரை	–	அ) வாய்ப்புண் நீக்கும்
2. கீழாநெல்லி	–	ஆ) கிருமி நாசினி
3. பொன்னாங்கண்ணி	–	இ) இரும்புச்சத்து மிக்கது
4. மஞ்சள்	–	ஈ) கண் பார்வை
5. மணித்தக்காளி	–	உ) மஞ்சள் காமாலை நீக்கும்

5. நம் உடலுக்குப் பொருந்தாததை வட்டமிடுக.

1. பழச்சாறு	கரும்புச்சாறு	குளிர்பானம்
2. அரிசி	மைதா	கம்பு
3. தக்காளிச் சாதம்	ஃபிரைடு ரைஸ்	புளி சாதம்
4. நூடுல்ஸ்	சோளப் பிட்டு	கம்பங்களி
5. காய்கள்	ஃபிரெஞ்ச்	ஃபிரை பழங்கள்

6. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. துரிதவகை உணவுகளால் உடலுக்கு ஏற்படும் தீங்குகளுள் இரண்டை எழுதுக.
2. நோயற்ற வாழ்விற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?

மதிப்பீடு – 4

1. கீழ்க்காணும் சட்டங்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.

1. இலவசக் கல்வி உரிமைச் சட்டம்.
2. போக்சோ சட்டம்.
3. தகவல் அறியும் உரிமைச் சட்டம்.
4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
5. குழந்தை திருமணத் தடுப்புச் சட்டம்.

2. பின்வரும் தொடர்களைப் படித்துச் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றமாகா.
2. 1 முதல் 8 வகுப்புவரை இலவசமாகக் கல்வி பெறலாம்.
3. குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பது, போக்சோ சட்டம்.
4. குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்ய சட்டம் இல்லை.
5. நுகர்வோரின் நலம் காப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

3. பொருத்துக.

1. முருங்கைக் கீரை - அ) வாய்ப்புண் நீக்கும்

2. கீழாநெல்லி - ஆ) கிருமி நாசினி

3. பொன்னாங்கண்ணி - இ) இரும்புச்சத்து மிக்கது

4. மஞ்சள் - ஈ) கண் பார்வை

5. மணித்தக்காளி - உ) மஞ்சள் காமாலை நீக்கும்

4. மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக.

5. நாள்காட்டியில் குறிப்பிட்ட நாள்களைக் குறித்தல்

1. காந்தி ஜெயந்தி எந்த நாளில் குறிப்பிடப்பட்டுள்ளது?

2. அக்டோபர் 2022 மாதத்தில் வரும் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமை எந்தத் தேதியில் உள்ளது?

3. APJ அப்துல்கலாம் பிறந்தநாள் எந்தத் தேதியில் வரும்?

4. அக்டோபர் 2022இல் மொத்தம் எத்தனை நாள்கள் உள்ளன?

பாடம் 18

அ. இணையவழிச் சேவை மற்றும் பணமில்லாப் பரிமாற்றம்

கண்ணன் : என்ன குமார், ஏன் உன் முகம் வாட்டமாயிருக்கிறது?

குமார் : நான் என் மகனை தனியார் பள்ளியில் சேர்க்கணும்னு நினைக்கிறேன், ஆனால் அதற்கு அதிக செலவாகுமே என கவலையாக இருக்கிறது.

கண்ணன் : இதற்காக நீ இவ்வளவு கவலைப்படாதே. அதற்கு தான் நமது அரசு 25% இடஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் சேர்க்கை அளிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறதே.

குமார் : ஓ! அப்படியா! அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு விண்ணப்பிப்பது?

கண்ணன் : அதற்கு உனது வருமானச் சான்று, சாதிச்சான்று இருப்பிடச் சான்று ஆகியவற்றை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து உன் வீட்டிற்கு அருகில் உள்ள தனியார் பள்ளிக்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டும்.

குமார் : இந்தச் சான்றிதழ்களை நான் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்று பெறுவதற்கு இரண்டு மூன்று நாள்களாகுமே, அதுவரை நான் வேலைக்குச் செல்ல முடியாதே?

கண்ணன் : நீ செல்லும் வேலைக்கு விடுமுறை எடுக்காமலேயே அருகில் உள்ள இ–சேவை மையத்தில், இணையவழியாக விண்ணப்பித்து மேற்கண்ட சான்றிதழ்களை எளிதாகப் பெற்றுக்கொள்ளலாம்.

குமார் : ஓ! அப்படியா! இதுபோல் இணையவழியாக வேறு என்னென்ன சேவைகளைப் பெறலாம்?

கண்ணன் : இணையவழியாக வீட்டுவரி, குடிநீர் வரி, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், கல்விக் கட்டணம், தேர்வுக்கட்டணம், ஆதார் திருத்தம், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கல் போன்ற சேவைகளை எளிதாகப் பெறமுடியும்.

மேலும் அன்றாடம் நம் வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கும்போதும், எங்கேயாவது பயணம் போகணும்னாக்கூட பயணச்சீட்டைப் பதிவு செய்யவும் அதற்கான தொகையினை இணையவழி மூலம் நம் திறன்பேசியில் இணைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலிருந்தே பணம் செலுத்தவும் அதற்கென்று உரிய செயலியைப் பயன்படுத்தி பயன்பெறலாம்.

ஒ ! இனி, என்னோட எல்லாத் தேவைக்கும் நான் இணையவழிப் பணப் பரிமாற்றத்தையே பயன்படுத்தப் போகிறேன் என்று மகிழ்ச்சியுடன் கூறினார் குமார்.

சேவைகளுக்கான கட்டண விவரம்

வ. எண்	துறை	சேவைகள்	சேவைக் கட்டணம்
1	வருவாய்த் துறை	சாதிச் சான்றிதழ்	60.00
2		இருப்பிடச் சான்றிதழ்	60.00
3		வருமானச் சான்றிதழ்	60.00
4		பிறப்புச் சான்றிதழ்	60.00
5		இறப்புச் சான்றிதழ்	60.00
6		முதல் பட்டதாரிச் சான்றிதழ்	60.00
7		கணவரால் கைவிடப்பட்ட பெண் சான்றிதழ்	60.00
8		வேலையின்மைச் சான்றிதழ்	60.00
9		விதவைச் சான்றிதழ்	60.00
10		வாரிசுச் சான்றிதழ்	60.00
11		குடும்ப இடம்பெயர்வு சான்றிதழ்	60.00

ஆ. பணம் – அறிமுகம்

கவிதா தன் வீட்டிற்குத் தேவையான மளிகைப்பொருள்களைக் கடையில் வாங்கினாள். கடையில் வாங்குவதற்கு அவள் கடைக்காரரிடம் என்ன தரவேண்டும்?

சில்லறையாக மாற்றுதல்

குறிப்பு
1 ரூபாயில் 100 பைசாக்கள்உள்ளன.

நோட்டுகள் (படம்)

₹10	₹20	₹50	₹100	₹200	₹500

பொருள்கள் குறிக்கும் விலை மதிப்பினை வட்டமிடுக

₹20

₹10

₹5

பணத்தைப் பல்வேறு வழிகளில் குறிப்பிடலாம்



வங்கி – காசோலை

வங்கிக் காசோலையைப் பணப்பரிமாற்றம் செய்வதற்காகப் பயன்படுத்துகிறோம்.

காசோலையின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



காசோலையில் பயன்பெறுபவரின் பெயரும் தேவைப்படும் தொகையும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

காசோலை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதம் வரை செல்லுபடியாகும்.

பயனாளியின் பெயர், தேதி, தொகை, கையொப்பம்

பயிற்சிகள்

1. சொற்களை இணைத்து எழுதுக.



2. பொருத்துக.

1. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி	–	அ)	ஆதரவற்ற பெண்களுக்கான நிதி உதவி
2. ஈ.வே. ரா. மணியம்மையார்	–	ஆ)	விதவை மறுமண நிதி உதவி
3. அன்னை தெரேசா	–	இ)	கலப்புத் திருமண நிதி உதவி
4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார்	–	ஈ)	விதவையர் மகள் திருமண நிதி உதவி

3. வினாக்களுக்கு விடையளிக்க.

1. குமாரிடம் இ–சேவை வசதி பற்றிக் கூறியவர் யார்?
2. பள்ளியில் சேர்ப்பதற்கு என்னென்ன சான்றிதழ் தேவை என்று கண்ணன் கூறினார் ?
3. கண்ணன் எந்தத் திட்டத்தின் கீழ் தன் குழந்தையைத் தனியார் பள்ளியில் சேர்ப்பதற்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறினார் ?

4. கொடுக்கப்பட்டுள்ள சில்லறை மற்றும் ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பினை எழுதுக.

ரூபாய் நோட்டுகள், சில்லறை	மொத்தம்

5. நாணயம் மற்றும் பணத்தாளினைப் பயன்படுத்திப் பொருள்களின் மதிப்பைப் பொருத்துக.

₹14

₹25



₹40

6. கீழ்க்காணும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.

1. பணமில்லாப் பரிமாற்றம்
2. வங்கிக் கணக்கு எண்
3. திறன்பேசி
4. மின்கட்டணம்
5. தொடர்வண்டிப் பயணம்

7. இடம் மாறியுள்ள எழுத்துகளை முறைப்படுத்திச் சொல்லாக்குக.

கி	ங்	வ	–	வங்கி

ண	ப	ம்	–	

ய	செ	லி	–	

ய	ணை	ம்	இ	–	

8. வினாக்களுக்கு விடையளிக்க.

1. இணையவழிச் சேவையைப் பயன்படுத்த, நாம் திறன் பேசியில் எதனை நிறுவ வேண்டும்?
2. பணமில்லாப் பரிமாற்றத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.
3. பணமில்லாப் பரிமாற்றத்தை நீங்கள் பயன்படுத்துவதாக இருந்தால், எவற்றிற்கெல்லாம் முன்னுரிமை கொடுப்பீர்கள்? பட்டியலிடுக.

9. பின்வரும் காசோலையைப் நிரப்புக.



வங்கியில் பணம் செலுத்துதல் மற்றும் எடுத்தல் படிவம்



इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

नकदी आहरण पर्ची / CASH WITHDRAWAL SLIP

(लेनदेन सिर्फ गृह शाखा में अनुमत है)
(USABLE AT BASE BRANCH ONLY)

यह प्रपत्र चैक नहीं है ।
This Form is not a cheque.

दिनांक/Date ______ 20

मुझे/हमें/अदा करें
Pay to self / us the sum of ₹ ______

₹

मेरे / हमारे खाता संख्या से नामे करें
to the debit of my/our Bank A/c No.

खाता धारक के हस्ताक्षर / Sig. of A/c Holder
खाता धारक(कों) का नाम
Name(s) of A/c Holder(s) ______

For Office Use / केवल कार्यालय प्रयोग हेतु

लेनदेन आईडी / Trans. ID ______

टोकन सं./Token No. ______

श्री / श्रीमती / सुश्री / को भुगतान करें Pay to Sh./Smt./Ms. ______

₹ ______

पारित करनेवाला अधिकारी के हस्ताक्षर
Signature of Passing officer

भुगतानकर्ता अधिकारी के हस्ताक्षर
Signature of Paying Official

OSP MUM



வைப்புநிதி செலுத்தும் சீட்டு /DEPOSIT / PAY IN SLIP

इंडियन बैंक Indian Bank

கிளை/Branch ______

தேதி
Date

சேமிப்பு/நடப்பு/ஒ.டி./சி.சி./தொடர்/காலக்கடன்/பி.எல்/கடன் அட்டை எண்.
SB/CA/OD/CC/RD/TL/DL A/c No./Credit Card No.

பெயர் /Name ______

தொலைபேசி எண்/Tel. No. ______

	ரூ./₹	பை/P.
ரொக்கம் Amount		

ரூபாய் எழுத்தால்/Rupees in words ______

ரொக்கம்/காசோலை/தேதி/வங்கியின் பெயர்/கிளை Cash/Cheque No./Date & Name Of Bank & Branch	ரூ./₹	பை/P.
மொத்தம்/Total		

அதிகாரி/காசாளர்/ஒ.சா.பா
Officer/Cashier/SWO

Do not share Your PIN/OTP/Card Details Password to any Person

Indian Bank Toll Free 1800 425 00 000

வைப்புநிதி செலுத்தும் சீட்டு /DEPOSIT / PAYIN SLIP

ரூபாய் 50,000க்குமேல் ரொக்கம் செலுத்தும் விபரம்
For Cash Deposit of ₹ 50,000/- & Above

வருமான வரி எண்./PAN NO
or
படிவம் 60/ Form60

ரொக்கம் செலுத்தும் விபரம் / CASH DEPOSIT

நோட்டுகள்/Notes	எண்/ No.	ரூ./₹	பை/P.
2000 X			
500 X			
200 X			
100 X			
50 X			
20 X			
10 X			
5 X			
காசுகள்/Coins			
மொத்தம்/Total			

1. அனைத்து காசோலைகளும் கிராஸ் செய்ய வேண்டும். All Cheques must be crossed.
2. கணக்கு எண். மற்றும் பெயரை காசோலையின் பின் குறிப்பிடவும் Please mention your A/c No. and Name on back of the Cheque.
3. ரொக்கம்/உள்ளூர் வெளியூர் காசோலை என வகைப்படுத்தி தனி சீட்டுகளைப் பயன்படுத்தவும். Please use separate slips for Cash Deposit, outstation Cheques and Local Cheques

इंडियन बैंक Indian Bank

கிளை
Branch ______

தேதி
Date

சேமிப்பு/நடப்பு/ஒ.டி./சி.சி./தொடர்/காலக்கடன்/பி.எல்/கடன் அட்டை எண்.
SB/CA/OD/CC/RD/TL/DL A/c No./Credit Card No.

பெயர் /Name ______

தொலைபேசி எண்./ Tel. No./ Mobile No. ______

மின்னஞ்சல் /Email ID ______

ரூபாய் எழுத்தால் /Rupees in words ______ ரூ. Rs.

காசோலை எண்/தேதி/வங்கியின் பெயர்/கிளை Cheque No. / Date Name of Bank & Branch	ரூ./₹	பை/P.
மொத்தம்/Total		

பரிவர்த்தனை அடையாள அட்டை / Transaction ID

ஒ.சா.ப. அதிகாரி/SWO அதிகாரி / Passing Officer

செலுத்துபவர் கையொப்பம்
Signature of Depositor

பாடம்
19

அ. பேரிடர் மேலாண்மை

அறிமுகம்

நாம் வாழும் பூமியானது தனது இயற்கைச் சமநிலையைத் தானே பராமரித்துக் கொள்கிறது. இந்தச் சமநிலை சில நேரங்களில் மாறுபாடு அடையும் போது மனிதர்களின் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைவிப்பதாக அமைகின்றது. இதனை இடராக நாம் உணர்கிறோம். இந்த இடரின் விளைவாக உண்டாகும் பெரும் சேதத்தையே நாம் பேரிடர் என்கிறோம். இந்தப் பேரிடரினால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பது, தவிர்ப்பது, பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகப் பொருத்தமான உதவிகளை உறுதிப்படுத்துவது மற்றும் விரைவான, பயனுள்ள மீட்சியை அளிப்பதே பேரிடர் மேலாண்மை ஆகும்.

பேரிடரின் வகைகள்

1. இயற்கைப் பேரிடர் Natural Disaster	2. மனிதனால் ஏற்படுத்தப்படும் பேரிடர் Human Made Disaster
புயல்	சாலை விபத்துகள்
மழை, வெள்ளம்	ஆழ்துளைக் கிணறு விபத்து
மின்னல் மற்றும் இடி	நீரில் மூழ்கும் விபத்துகள்
சுனாமி	கட்டட விபத்து
நிலநடுக்கம்	தீ விபத்து
நிலச்சரிவு	மின் விபத்துகள்
வறட்சி	கூட்ட நெரிசல்
	கலவரம்
	இதர இடர்பாடுகள்

இயற்கைப் பேரிடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைகள்

1. புயல் பாதுகாப்பு முறைகள்

1. வதந்திகளை நம்பக் கூடாது. வானொலி, தொலைக்காட்சி செய்திகளைக் கவனித்து செயல்படுதல் வேண்டும்.
2. மரங்களிலிருக்கும் இலை, தழைகளை அகற்றிக் கிளைகளின் பாரத்தைக் குறைத்தல் வேண்டும்.
3. வீட்டின் மேற்கூரை ஓலையாகவோ, தகரக்கூரையாகவோ இருப்பின், கயிறு போன்ற பொருள்களால் இறுகக் கட்டி வைத்தல் வேண்டும்.
4. உடைமைகள், ஆவணங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பான இடங்களில் வைத்திருத்தல் வேண்டும்.
5. கால்நடைகள், வளர்ப்பு விலங்குகள், பறவைகளைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

6. உணவுப் பொருள், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, எரிபொருள், குடிநீர், முதலுதவிப் பெட்டி முதலிய இன்றியமையாப் பொருள்களைச் சேமித்துப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும்.

2. கன மழை, வெள்ளம் (Flood) பாதுகாப்பு முறைகள்

1. வசிக்கும் பகுதி வெள்ளத்திற்கு உட்படும் தன்மை கொண்டதா என்பதைக் கண்டறிய வேண்டும்.
2. வெள்ளப்பெருக்குக் காலத்தில் வெளியில் செல்லுதல் கூடாது.
3. மின் சாதனங்களைத் தொடக் கூடாது.
4. தாழ்வான பகுதியில் குடியிருப்பு இருப்பின், சற்று உயரமான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

3. மின்னல் மற்றும் இடி (Lightning and Thunder)

1. திறந்தவெளிக்குச் செல்லாதிருத்தல், மரத்தடிக்குச் செல்லாதிருத்தல் பாதுகாப்பான இடம் தேடி ஒதுங்குதல்.
2. பாதுகாப்பான இடம் இல்லையெனில், குத்துக்காலிட்டு உட்கார்ந்து பாதங்களை நெருக்கமாக வைத்துக்கொண்டு, தன்னிடமுள்ள உலோகப் பொருள்களைத் தொலைவில் வைத்தல்.
3. அலைபேசியை அணைத்து வைத்தல்.

4. வறட்சி (Drought)

1. அதிக மரங்களை வளர்த்தல்.
2. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
3. நீரைச் சேமிக்கும் முறைகளைப் பின்பற்றுதல்.

மனிதனால் ஏற்படும் பேரிடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைகள்

1. சாலை விபத்துகள் (Road Accidents)

1. சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. பேருந்து நின்றவுடன் ஏறவும்/இறங்கவும், படியில் பயணம் செய்யச்கூடாதெனவும் அறிவுறுத்துதல்.
3. சாலைகள் மற்றும் இருப்புப்பாதையைக் கடக்கும்போது இருபுறமும் பார்த்து கவனமாகக் கடக்கும்படி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
4. பள்ளி, சாலை அருகில் இருப்பின் வேகத்தடை மற்றும் எச்சரிக்கைப் பலகை வைக்க ஏற்பாடு செய்தல்.

2. ஆழ்துளைக்கிணறு விபத்து (Borewell Accident) **பாதுகாப்பு முறைகள்**

1. உரிய அனுமதியுடன் ஆழ்துளைக்கிணறு அமைக்க வேண்டும்.
2. நீர் இல்லையெனில் அதனை மூடிபோட்டு/கான்கிரீட் மூலம் முறையாக அடைக்க வேண்டும்.

3. தீ விபத்து (Fire Accident) பாதுகாப்பு முறைகள்

1. மூன்று காரணிகளுள் (காற்று, எரிபொருள், வெப்பம்) ஏதேனும் ஒன்றை நீக்குதல் வேண்டும்.
2. தீ விபத்து ஏற்படும் போது அனைத்து ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்க வேண்டும்.
3. மின் இணைப்பைத் துண்டித்தல் வேண்டும்.
4. தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவித்தல் வேண்டும்.
5. மின்சாதனங்களில் தீ ஏற்படும் போது தண்ணீர் ஊற்றி அணைக்கக் கூடாது.
6. அவசர காலங்களில் உடனடியாக வெளியேற அறிவுறுத்தல் வேண்டும்.

4. மின் விபத்துகள் (Electric Shocks)

பாதுகாப்பற்ற நிலையிலுள்ள மின்சாதனங்களைப் பயன்படுத்துதல், மழைக்காலங்களில் /இரவில் அறுந்துகிடக்கும் மின்கம்பிகளை மிதித்தல், மின்னோட்டமுள்ள ஈரமான சுவர்கள் மற்றும் மின்கம்பங்களைத் தொடுதல் போன்ற பல காரணங்களினால் விபத்துகளும் உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன.

பாதுகாப்பு முறைகள்

1. மின்சாரம் கடத்தாப் பொருளைக் கொண்டு விபத்தில் சிக்கியவரைக் காப்பாற்றுதல்.
2. குடியிருப்பு பகுதிக்குள் உயர் அழுத்த மின்கம்பிகள் சென்றால் அதனை நீக்க நடவடிக்கை எடுத்தல்.

5. கூட்ட நெரிசல் (Stampede)

கோவில் திருவிழாக்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள், திரையரங்கங்கள், வணிக வளாகங்கள், இசை நிகழ்ச்சிகள், பொருட்காட்சி, மாநாடுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் மக்கள் பெருமளவில் திரண்டு கூடியிருக்கும் பொழுது, ஏதோ ஒரு காரணத்தினால் திடீரெனக் கட்டுப்பாடின்றிக் குழப்பத்துடன் ஓர் இடத்தை நோக்கி அனைவரும் முட்டி மோதிக் கொண்டும், தள்ளிக்கொண்டும் ஓடுவதால், கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. இக்கூட்ட நெரிசலால் உயிரிழப்புகள், எலும்பு முறிவு, சுவாசப் பிரச்சினை, உடைமை இழப்பு முதலியன ஏற்படுகின்றன.

பாதுகாப்பு முறைகள்

1. மக்கள் கூடும் இடங்களில் வெளியேறும் வழிகள் (EXIT Way) பற்றி முன்னரே அறிந்திருக்க வழிகாட்டுதல் வேண்டும்.

6. முதலுதவி

ஏதேனும் விபத்து ஏற்படும்போது பாதிக்கப்பட்டவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குமுன் செய்யப்படும் எளிய சிகிச்சைகள் முதலுதவி எனப்படும்.

வெட்டுக்காயம் மற்றும் இரத்தப்போக்கு

1. காயம்பட்ட இடத்தில் சுத்தமான துணி அல்லது பருத்திப்பஞ்சு வைத்து அழுத்திப் பிடித்தல்.

2. காயம்பட்டவரைப் படுக்க வைத்தல்.
3. குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தல்.
4. வெட்டுப்பட்ட இடத்தை உயர்த்திப் பிடித்தல்.

மயக்கமடைதல்

1. மயக்கமடைந்தவரின் இறுக்கமான ஆடைகளைத் தளர்த்துதல்.
2. கூட்டம் கூடுவதைத் தவிர்த்து, காற்றோட்டமான இடத்தில் படுக்க வைத்தல்.
3. முகத்தில் தண்ணீர் தெளித்தல்.
4. மயக்கம் தெளிந்தவுடன் குடிப்பதற்குச் சிறிது, சிறிதாகத் தண்ணீர் கொடுத்தல்.

ஆ.பணம் – கூட்டல், கழித்தல்



இறைவி, கதிர், வாஞ்சி, முகில் ஆகியோர் தங்கள் குடும்பத்துடன் பொருட்காட்சிக்குச் சென்றனர். அவர்கள் விரும்பி விளையாடிய சில விளையாட்டுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

பின்வருவனவற்றிற்கு விடையளி:

1. கதிர் நான்கு விளையாட்டுகளையும் விளையாடுகிறான் எனில் அவன் செலுத்த வேண்டிய மொத்த பணம் எவ்வளவு?

2. முகில் இரங்கராட்டினம் இருமுறை விளையாடினாள். அவள் + செலுத்தினாள் எனில், அவள் மீதம் பெற வேண்டிய தொகை எவ்வளவு?

3. கதிர் வாஞ்சி மற்றும் முகில் ஆகிய மூவரும் ஒருமுறை இராட்டினம் விளையாடினர் எனில், அவர்கள் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

பயிற்சிகள்

1. **பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. தீயணைப்பு வீரர்கள்	6. வாயுக் கசிவு
2. நுழைவுச் சீட்டு	7. இணைப்புக் குழாய்
3. எரிவாயு	8. விடியற்காலை
4. மின்விளக்கு	9. பேரிடர் மேலாண்மை
5. வேடிக்கை	10. மின்சாரம்

2. **பின்வரும் தொடர்களைப் படித்துக்காட்டுக.**

   1. எதிர்பாராமல் தீ விபத்து ஏற்பட்டால், தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் கொடுக்கவேண்டும்.
   2. சமையலறை, காற்றோட்டமானதாக இருக்கவேண்டும்.
   3. ஒவ்வொரு முறை வாங்கும்போதும் எரிவாயு உருளையில் கசிவு உள்ளதா எனச் சரிபார்க்க வேண்டும்.
   4. சமையல் முடிந்ததும், எரிவாயு அடுப்பை அணைப்பதுடன், உருளையின் திருகையும் மூடிவைக்க வேண்டும்.
   5. வாயுக் கசிவு பரவியிருப்பதாக உணர்ந்தால், மின் குமிழிகளைப் பயன்படுத்தாமல், உடனடியாகத் தீயணைப்பு நிலையத்தைத் தொடர்பு கொள்ளவேண்டும்.

3. **பின்வரும் பொருள்களுள் எவையெவை முதலுதவிப் பெட்டியில் இடம்பெறும்?**



4. வாங்கிய பொருள்களின் விலையை உற்றுநோக்கவும். உங்களிடம் உள்ள பணத்தை எண்ணி, செலவு செய்த பணத்தையும், மீதம் உள்ள பணத்தையும் கணக்கிடுக.

வாங்கிய பொருள்கள்	உங்களிடம் உள்ள பணம்	நீங்கள் செலவு செய்த பணம்		உங்களிடம் மீதமுள்ள பணம்	
		பத்து	ஒன்று	பத்து	ஒன்று
					
		1	5	4	0
		2	0	3	5
₹ 15 ₹ 20	40	3	5		5
₹ 20 ₹ 5					
₹ 10 ₹ 20					
₹ 5 ₹ 6					
₹ 20 ₹ 10					

பாடம்
20

அ. சாலைப் பாதுகாப்பு – முதலுதவி

தேசிய நெடுஞ்சாலையில். இளவரசன், தான் புதிதாக வாங்கிய இரு சக்கர வண்டியில் தன் நண்பனுடன் சென்று கொண்டிருந்தான். திடீரென 'டமார்' என்னும் சத்தம் கேட்டது. சாலையில் சென்று கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டுத் தத்தமது வண்டிகளை ஓரமாக நிறுத்திச் சத்தம் வந்த திசைநோக்கி ஓடினர். இளவரசனும் தன் வண்டியை நிறுத்திவிட்டுத் தன் நண்பனுடன் ஓடினான். என்ன நடந்தது என்று, அவர்கள் சென்று பார்ப்பதற்குள் அங்கு ஒரு கூட்டமே கூடிவிட்டது.

அங்கு ஒரு மகிழுந்து சாலையோரத்திலிருந்த கல்லில் இடித்து நின்றிருந்தது. அங்குக் கூடியிருந்த கூட்டத்திலிருந்து சிலர், தமது திறன்பேசியில் நடந்ததைப் படம் பிடித்துக் கொண்டிருந்தனர். சிலர், சுய ஒளிப்படம் (Selfi) எடுத்துக் கொண்டிருந்தனர். வேறு சிலரோ முகநூலில் நேரடியாக ஒளிபரப்பு செய்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தை விலக்கிவிட்டு, உள்ளே நுழைந்த இளவரசன், மகிழுந்தில் மயங்கிய நிலையில் இருவர் இருப்பதைக் கண்டான். சற்றும் நேரங்கடத்தாமல், உடனடியாக 108 எண்ணுக்கு அழைப்பு விடுத்துச் செய்தியைக் கூறினான். அவசர ஊர்தி வருவதற்குள், மகிழுந்தின் கதவைத் திறக்க முயற்சி செய்தான். ஆனால், முடியவில்லை. அப்போது, உள்ளே இருந்தவர் மெல்ல அசைந்தார். அவரைப் பார்த்துக் கையசைத்து, மெதுவாகக் கதவைத் திறக்குமாறு இளவரசன் கூறினான். அவரும் தட்டுத்தடுமாறி மகிழுந்தின் கதவைத் திறந்தார்.

தலையிலும் முகத்திலும் காயத்தோடு காணப்பட்ட அவர், அருகிலிருந்த தம் மகளை நோக்கினார். அந்தச் சிறுமிக்குக் கைகளில் காயம் இருக்க, அச்சத்தால் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தாள். நல்லவேளையாக, இருவரும் சுயநினைவுடன் இருந்ததால், காயத்தின் அளவு குறைவாக இருக்கும் என இளவரசன் ஊகித்தான். அடிபட்டவரிடம், விபத்து எப்படி ஏற்பட்டது? எனக் கேட்டான்.

"என் சொந்த வேலை காரணமாகக் காலையில் ஊருக்குச் சென்றேன். அந்தப் பணி முடிய மாலை நேரமாகிவிட்டது. அதனால், எப்படியாவது இரவுக்குள் மீண்டும் வீடு திரும்பிவிடலாம் என நினைத்து வண்டியை வேகமாக இயக்கினேன். விபத்து நடந்த இந்த இடத்திற்குமுன் ஒரு வளைவு இருந்தது. அந்த வளைவில் வண்டியை வேகமாகத் திருப்பியபோது, சாலையோரத்திலிருந்த கல்லைக் கவனிக்கத் தவறிவிட்டேன். கட்டுப்பாட்டை இழந்து என் வண்டி, அந்தக் கல்லில் மோதி நின்றுவிட்டது. வளைவில் வேகமாகத் திருப்பியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது. என் மகள் அச்சத்தில் மிகவும் நடுங்கிக் கிடக்கிறாள்" என்று அவர், மெல்லிய குரலில் கூறி முடிக்கவும், அவசர ஊர்தி ஒலியெழுப்பிக் கொண்டே வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அடிபட்டவரிடமிருந்து அவரது முகவரியையும் செல்பேசி எண்ணையும் கேட்டு, மறக்காமல் குறித்துக்கொண்டான் இளவரசன். அடிபட்டவரும் அவருடைய மகளும் அவசர ஊர்தியில் ஏறுவதற்கு இளவரசனும் நண்பனும் உதவினர். பின்னர், அவரிடமிருந்து பெற்ற அந்தச் செல்பேசி எண்ணுக்குத் தகவல் தெரிவித்தனர்.

வீட்டுக்கு வந்த இளவரசனிடம், அவன் தந்தை "என்னப்பா, புது வண்டி எப்படி இருக்கு? நன்றாக ஓட்டுவதற்குக் கற்றுக்கொண்டாயா?" எனக் கேட்டார். அதற்கு இளவரசன், "ஓ! நன்றாக ஓட்டுவது இருக்கட்டும். எப்படி ஓட்டக்கூடாது என்பதையும் நான் கற்றுக்கொண்டேன், அப்பா!" என்று கூறியவனை வியப்புடன் பார்த்தார் தந்தை. அப்போது, "சாலைப் பாதுகாப்பு, நம் உயிர்ப் பாதுகாப்பு" என்று இளவரசனின் தங்கை பாடிக்கொண்டே சென்றாள். "அப்பா, புதுவண்டியுடன் எனக்குப் புதுத் தலைக்கவசமும் வாங்கிக் கொடுங்கள்" என்று இளவரசன் கூற, தந்தையின் முகத்தில் புன்னகை அரும்பியது.

அறிந்துகொள்வோம்

போக்குவரத்தினால் ஏற்படும் விபத்தினைத் தவிர்க்க உதவும் பத்துக் கட்டளைகள்

விதிகளை மதி	கோட்டுக்குள் ஓட்டு
கவனமாக ஓட்டு	இரவில் மிகையொளி பாய்ச்சாதே
முந்திச் செல்வதனைத் தவிர்	வண்டி ஓட்டும்போது, செல்பேசியில் பேசாதீர்
வேகத்தைக் குறை	மது அருந்திவிட்டு வண்டி ஓட்டாதீர்
நில் கவனி செல்	காவல்துறையோடு ஒத்துழை

ஆ.அஞ்சலகத்தில் பணம் போடும் படிவம்


SB-103

பணம் செலுத்தும் படிவம்

அஞ்சலக சேமிப்பு வங்கி
(வாடிக்கையாளரின் கையிருப்புக்காக)

Azadi Ka Amrit Mahotsav

.... அஞ்சலகம்
தேதி
கணக்கு வகை :-
கணக்கு வகை :- SB RD TD MIS SCSS PPF SSA KVP NSC இதர ....
கணக்கு எண்
வரவு வைக்கப்பட வேண்டியவரின் பெயர் ....
ரூபாய் (எழுத்துக்களில்) :..............................
பணம் / டிடி / காசோலை எண் ....
தேதி ....(பணமாக்கம் பொறுத்து) ரூ............../
வங்கியின் பெயர் & IFSC குறியீடு :..............................
வைப்பின் விவரம் :-
RD எனில், மாதம்(கள்) ....
தள்ளுபடி தொகை .... தாமதக்கட்டணம் ....
PPF /SSA எனில், நிதியாண்டு ....
தாமதக் கட்டணம் ....
கடன் திருப்பு தொகை .... கடன் மீதான வட்டி ....
தேதி முத்திரை
PA/SPM/GDS BPM ஒப்பம்

அஞ்சலக சேமிப்பு வங்கி

Azadi Ka Amrit Mahotsav

கணக்கு வகை :- SB RD TD MIS SCSS PPF SSA KVP NSC இதர ....
.... அஞ்சலகம் பரிவர்த்தனை எண் ....
கணக்கு எண்
தேதி
வரவு வைக்கப்பட வேண்டியவரின் பெயர் ....
ரூபாய் (எழுத்துக்களில்) :..............................
பணம் / டிடி / காசோலை எண் ....தேதி ....(பணமாக்கம் பொறுத்து)
வங்கியின் பெயர் ... . IFSC குறியீடு :......................
ரூ................./
வைப்பின் விவரம் :-
RD எனில், மாதம்(கள்) ....தள்ளுபடி தொகை .... தாமதக்கட்டணம் ....
PPF /SSA எனில், நிதியாண்டு .... தாமதக் கட்டணம் ....
கடன் திருப்பு தொகை .... கடன் மீதான வட்டி ....
தேதி முத்திரை
PA/SPM/GDS BPM ஒப்பம்
பணம் செலுத்துபவரின் கையொப்பம்
குறிப்பு : சேமிப்பு கணக்கில் DBT பயன்பெற ஆதார் உள்ளீடு அவசியம்
பணம் செலுத்துபவரின் அலைபேசி எண் ....PAN எண் ....
பெயர் & முகவரி ....

ரூபாய் எண்ணிக்கை		
2000 x	=	
500 x	=	
200 x	=	
100 x	=	
50 x	=	
20 x	=	
10 x	=	
5 x	=	
2 x	=	
1 x	=	
சில்லரை =		
மொத்தம் =		

SB-Saving Account, RD-Recuring Deposit, MIS-Monthly Income Scheme, SCSS-Senior Citizen Saving Scheme, PPF-Public Provident Fund, SSA-Sukanya Samriddhi Account, TD-Time Deposit (1/2/3/5 Years), KVP-Kisan Vikas Patra, NSC-National Saving Certificate VIII Issue

அஞ்சலக சேமிப்பு வங்கி

தனி நபர் கணக்கு ஆரம்பிக்க மற்றும் தேசிய சேமிப்பு பத்திரம் வாங்குவதற்க்கான விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக :

அஞ்சலகத்தின் பெயர் :											தேதி :				எஸ்.ஓ.எல்.ஐடி :			
கணக்கு பதிவு எண்.											சிஜஎப்.ஐடி 1							
சிஜஎப் ஐடி 2											சிஜஎப்.ஐடி 3							

விண்ணப்பம் செய்பவருக்கானது / செய்பவர்களுக்கானது

*1.எனது எங்களது பெயரில் கணக்கு ஆரம்பிக்க : சேமிப்பு கணக்கு / அடிப்படை சேமிப்பு கணக்கு / தொடர் வைப்பு கணக்கு / குறித்த கால வைப்பு வருடம் / மாதாந்திர வருவாய் கணக்கு / மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்ட கணக்கு / பொது சேம நல நிதி கணக்கு / சுகன்யா சம்ரித்தி சேமிப்பு கணக்கு / தேசிய சேமிப்பு பத்திரம் 8-ஆம் வெளியீடு / 9-ஆம் வெளியீடு அல்லது கிஸான் விகாஸ் பத்திரம் வழங்க வேண்டுகின்றோம்.

*2.விண்ணப்பிப்பவர் பாதுகாவலர் (மைனர் மனநிலை சரியாக இல்லாதவராக இருப்பின்) முழுப் பெயர் (பெயர்களுக்கிடையே இடம் விடவும்)

	திரு/திருமதி/பிற	முதற்பெயர் நடுப்பெயர் கடைசிப்பெயர்	பால்(ஆண்/பெண்)
1			
2			
3			

*3.தந்தை / கணவர் / தாயார் முழுப்பெயர்

*4.முகவரி

	முதல் விண்ணப்பதாரர்	இரண்டாம் விண்ணப்பதாரர்	மூன்றாம் விண்ணப்பதாரர்
ப்ளாட் எண் / பில்டிங் பெயர்			
தெரு/சாலை/இடம்/கிராமம்			
வட்டம் / அஞ்சலகம்			
நகரம் / மாவட்டம்			
மாநிலம்			
அஞ்சல் குறியீட்டு எண்			
தொலை / கைபேசி எண்			
மின்னஞ்சல்			

	*5.விண்ணப்பதாரரின் பிறந்த தேதி	PAN Number அல்லது படிவம் 60/61	சிஜஎப்ஐடி (முன்பே இருப்பின்)
1			
2			
3			

*6.கணக்கு இயக்கும் முறை (✓குறியிடவும்)

தனியே / தானே ☐ கூட்டு முறையில் (Joint 'B') ☐ கூட்டு முறையில் (Joint 'A') ☐ படித்த முகவர் மூலமாக ☐

*7.வாடிக்கையாளர் பற்றி அறிய கொடுக்கப்பட்ட ஆவண விவரம் :

	புகைப்பட அடையாளம்			முகவரி சான்று		
	1	2	3	1	2	3
ஆவண வகை						
ஆவண எண்						
செல்லுபடியாகும் தேதி (இருப்பின்)						

*8.முதல் வைப்பு விவரம் : தொகை (எண்ணால்) ரூ.____________(எழுத்தால்) ரூபாய் ____________________

____________________ வைப்பின் வகை ____________

*9.நியமனம் : நான்/நாங்கள், அரசு சேமிப்பு வங்கி சட்டம் 1873 (1873ன் 5ன்) 4ம் பிரிவின் கீழ், கீழே கொடுக்கப்பட்டுள்ள நபர் (களை) எனது / எங்களது மரணம் நிகழுமானால், கணக்கில் சேர்ந்துள்ள தொகையை பெற நியமிக்கிறேன்/நியமிக்கிறோம்.

	நியமனம் செய்யப்பட்டவரின் பெயரும் முகவரியும்	பிறந்த தேவி (மைனராக இருப்பின்)	நியமனத்தில் பங்கு	நியமனம் செய்யப்பட்டவர் மைனராக இருப்பின் அவர் சார்பாக தொகையைப் பெற உரிமையானவரின் பெயரும் முகவரியும்
1				
2				

நியமனம் செய்ய வாடிக்கையாளர் விரும்பினால், சாட்சியின் கையொப்பம் : ____________________

சாட்சியின் பெயரும் முகவரியும் : ____________________

* தேவையானவற்றை வாடிக்கையாளர் கண்டிப்பாக நிரப்ப வேண்டும்.

10. ஆதார் எண். ____________________

11. மைனர் / பாதுகாவலர் மூலமாக / மனநலம் குன்றியவரின் பாதுகாவலர் மூலமாக / பார்வையற்றவர் / மாற்றுத்திறனாளி / படிப்பறிவற்றவர் முகவர் மூலமாக / ஓய்வூதியம் பெறுபவர் / வறுமைக்கோட்டிற்கு கீழான நலத்திட்ட பயனாளி / அடிப்படை சேமிப்பு / சஞ்சயிகா / பிற கணக்கு ஆரம்பிக்க வேண்டுகிறேன். ____________________

12. மைனர் / மனநலம் குன்றியவருக்கான கணக்கு எனில், பாதுகாவலரின் பெயர், முகவரி, மைனருடனான உறவு முறை, ஆகிய விபரம் தருக : ____________________

13. மைனர் / மனநலம் குன்றியவர் நீங்கலாக மற்றவருக்கான கணக்கு எனில், சஞ்சயிகா அரசு நலத்திட்டத்தின் பெயர், வறுமைக் கோட்டிற்கு கீழ் பதிவு சேர்க்கை எண் ஆகிய விபரம் தருக : ____________________

14. மாதாந்திர தவணை தொகை (தொடர் வைப்பு கணக்குகளுக்கு) தொகை (எண்ணால்) ரூ.__________ (எழுத்தால்) ரூபாய் __________

15. தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது கிஸான் விகாஸ் பத்திரம் எனில் தயவு செய்து பத்திரங்களின் எண்ணிக்கை, பண பிரிவு ரூபாய் வழங்கவும் ____________________

16. நிரந்தர வேண்டுகோள் (ஏதேனும் இருப்பின்) ____________________

17. நாங்கள் பாஸ் புத்தகம் / பத்திரங்கள் பெற திரு / திருமதி ____________________ அவர்களை முகவராக நியமிக்கின்றோம்.

18. சேமிப்பு பத்திரங்கள் பெற்றுக்கொண்டேன் ____________________ (முதலீட்டாளர் / அங்கீகரிப்பட்ட முகவர்)

உறுதி மொழி :

நான் / நாங்கள் அஞ்சலக சேமிப்பு வங்கி பொது விதிகள் 1981 மற்றும் அஞ்சலக சேமிப்பு கணக்கு விதிகள் 1981 / அஞ்சலக தொடர்வைப்பு கணக்கு விதிகள் 1981 / அஞ்சலக குறித்தகால வைப்பு கணக்கு விதிகள் 1981 / மாதாந்திர வருவாய் கணக்கு விதிகள் 1987 / மூத்தகுடிமக்கள் சேமிப்பு திட்ட விதிகள் 2004 / சுகன்யா சம்ரித்தி சேமிப்பு கணக்கு விதிகள் 2014 / பொது சேம நல நிதி கணக்கு விதிகள் 1968 / தேசிய சேமிப்பு பத்திரங்கள் 8ம் மற்றும் 9ம் வெளியீடு விதிகள் / கிஸான் விகாஸ் பத்திரங்கள் விதிகள் (அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்களுக்கேற்ப) ஆகியவற்றை புரிந்து ஏற்று அவற்றின்படி நடக்க உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். மேலும் என்னிடம் / எங்களிடம் கோரப்படுமேயாயின், எனது / எங்களது பெயரில் அனைத்து அஞ்சலகங்களிலும் உள்ள அனைத்து வகையான கணக்குகளின் விபரங்களையும் அளிப்பேன் / அளிப்போம் என்று உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். மாதாந்திர வருவாய் கணக்கு / மூத்தகுடிமக்கள் சேமிப்பு திட்ட கணக்குகளில் வெவ்வேறு அஞ்சலகங்களில் செய்த முதலீடுகளில், தனி நபருக்கான அதிகப்படியான வரையறையை நான் / நாங்கள் தாண்டவில்லை என்றும் உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம்.

தேதி : ____/____/________ இடம் : ____________________

கையொப்பம் / இடது கை பெருவிரல் ரேகை :

முதல் விண்ணப்பதாரர்	இரண்டாம் விண்ணப்பதாரர்	மூன்றாம் விண்ணப்பதாரர்

அஞ்சலக உபயோகத்திற்காக

விண்ணப்பப் படிவத்துடன் கொடுக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து வாடிக்கையாளரைப் பற்றி அறிய வேண்டியவற்றுக்கான விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டதாக சான்றளிக்கிறேன். கீழ்காணும் எண்களுடைய தேசிய சேமிப்பு பத்திரம் / கிஸான் விகாஸ் பத்திரம் வழங்கப்பட்டது (பத்திரம் வழங்கக் கோரும் விண்ணப்பங்களுக்கு மட்டும்).

சேமிப்பு பத்திரங்களின் வரிசை எண்.	முதிர்வுத் தொகை	வழங்கப்பட்ட தேதி	பட்டுவாடா செய்யப்பட்ட தேதி

கிளை அஞ்சலக அலுவலரின் கையொப்பம்

துணை அஞ்சலக/தலைமை அஞ்சலக அலுவலரின் கையொப்பம்

பயிற்சிகள்

1. கீழே கொடுக்கப்பட்ட படங்களில், நீங்கள் காணும் தவறுகளைப் பட்டியலிடுக.

		
		

2. பொருத்துக.

1. காவல்துறை	–	108
2. தீயணைப்புத் துறை	–	103
3. தீயணைப்புத் துறை ஊர்தி	–	100
4. போக்குவரத்துக் காவல் துறை	–	101
5. உடனடித் தேவைக்கான ஊர்தி	–	102

2. கீழ்க்காணும் படங்களைக் காணுங்கள். இத்தகைய விபத்துகள் நேர்ந்தால், என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? அவற்றுள் எவையேனும் ஐந்தைக் குறிப்பிடுக.

	
தீ விபத்து (கட்டடம் இடிந்து விழுதல்)	சாலைப் போக்குவரத்து விபத்து

4. **பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

1. சாலையில் எப்போதும் ------- செல்லவேண்டும். (வலப்பக்கமாக/ இடப்பக்கமாக)
2. மகிழுந்தில் செல்லும்போது ------ அணிந்திருக்கவேண்டும். (கைக்கடிகாரம்/ இருக்கைப் பட்டை)
3. இரவில் மிதிவண்டியிலோ, இருசக்கர வண்டியிலோ செல்பவர் ------- ஆடை அணிந்திருத்தல் நல்லது. (வெள்ளை/ கறுப்பு)
4. தொடர்வண்டிகள் செல்லும் இருப்புப்பாதையில் நாம் நடந்து -------(செல்லலாம்/ செல்லக்கூடாது.)

5. **பின்வரும் அஞ்சலகப் பற்றுச்சீட்டை நிரப்புக.**

1. அஞ்சலகக்கிளை
2. சேமிப்புக் கணக்கு எண்
3. தேதி
4. கணக்கு வைத்திருப்பவரின் பெயர்
5. செலுத்தும் தொகை
6. பணம் / காசோலை

SB 103	SB 103
SB/RD/MIS **POST OFFICE SAVINGS BANK** ………………………. Post Office Account No : ……………………….. Date : …………………… …………………………….. Paid into the credit of …………………….. Rupees ……………………. ……………………………… Rs. by cash/cheque No : …………………………….. by : Date : …………………… …………… …bject to realisation) SB Assistant …………….. Date Stamp	**POST OFFICE SAVINGS BANK** …………………………………….. Post Office Account No. ……………………… Date : …………………… ………………………...………………………...……….. Paid into the credit of Rupees ………………………….. Rs. ……………………………………………………… by cash/cheque No………… Date : …………………… (Particulars of the cheque) Balance after transaction ……………………………………………. SB Assistant ………………………… Date Stamp by …………………………..

அவசரகால தொலைபேசி எண்கள்

காவல் துறை	100
காவல் குறுஞ்செய்தி	95000 99100
தீ விபத்து மற்றும் மீட்பு	101
போக்குவரத்துக் காவல்	103
அவசர மற்றும் விபத்துகள்	100, 103, 1099
ஆம்புலன்ஸ் சேவை	102, 108
பெண்கள் உதவி சேவை	1091
குழந்தை உதவி சேவை	1098
மூத்த குடிமக்கள் உதவி சேவை	1233
தேசிய நெடுஞ்சாலை அவசர உதவி	1033
கடலோர அவசர உதவி சேவை	1093
இரத்த வங்கி அவசர உதவி	1910
கண் வங்கி அவசர உதவி	1919

மதிப்பீடு – 5

1. **பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. தீயணைப்பு வீரர்கள்
2. நுழைவுச் சீட்டு
3. எரிவாயு
4. மின்விளக்கு
5. வேடிக்கை

2. **பொருத்துக.**

1. டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி – ஆதரவற்ற பெண்களுக்கான நிதி உதவி
2. ஈ.வே. ரா. மணியம்மையார் – விதவை மறுமண நிதி உதவி
3. அன்னை தெரேசா – கலப்புத் திருமண நிதி உதவி
4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் – விதவையர் மகள் திருமண நிதி உதவி

3. **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பணமில்லாப் பரிமாற்றத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.
2. நமக்கு உதவும் நலத்திட்டங்களுள் எவையேனும் இரண்டு எழுதுக.

4. **அஞ்சலக பற்றுச்சீட்டை நிரப்புக.**

1. அஞ்சலகக்கிளை
2. சேமிப்புக் கணக்கு எண்
3. தேதி
4. கணக்கு வைத்திருப்பவரின் பெயர்
5. செலுத்தும் தொகை
6. பணம் / காசோலை.

ஒருங்கிணைந்த பணவிடை

பதிவு செய்யும் தபால் நிலையத்தின் பெயர்

அனுப்புநர்

பெயர் ....
குடும்ப பெயர் ....
வீட்டு எண்/ தெரு ....
கிராமம்/ மாவட்டம்/நகரம் ....
மாநிலம் ....
அஞ்சல் குறியீட்டு எண் ....
கைபேசி எண் ....

பெறுநர்

பெயர் ....
குடும்ப பெயர் ....
வீட்டு எண்/ தெரு ....
கிராமம்/ மாவட்டம்/நகரம் ....
மாநிலம் ....
அஞ்சல் குறியீட்டு எண் ....
கைபேசி எண் ....
தொகை ரூ.................எழுத்தால்..............................

தயவுசெய்து பணவிடை வகையை தேர்வு செய்யவும்

☐ 1. மின்னஞ்சல் பணவிடை(தொகை தபால்காரரால் முகவரியில் வழங்கப்படும்)
தகவல் குறியீடு ☐☐

☐ 2. iMO தொகை iMO அலுவலகத்திலிருந்து சேகரிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலக சேமிப்பு கணக்கு எண்ணில் ....வரவு வைக்கப்படும்
கணக்கு வைத்திருப்பவரின் பெயர்..............................
தபால் அலுவலகத்தின் பெயர்..............................
தகவல் குறியீடு ☐☐

☐ 3. கைபேசியில் இருந்து கைபேசிக்கு பணவிடை
அடையாளச்சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்
அடையாள அட்டை எண்..............................
அடையாள அட்டை காலாவதியாகும் தேதி..............................
வழங்கும் அமைப்பு..............................

பெறுநர் கைபேசியில் இருந்து கைபேசிக்கு, பணப்பரிமாற்ற அலுவலகத்திற்கு சென்று தொகையை வசூலிக்க வேண்டும் என்பதை நான் அறிவேன், அதன்படி நான் அவரிடம் தெரிவிப்பேன்.

கைபேசி பணப்பரிமாற்றம் / iMO க்கான உரிமைகோரல் பதிவு செய்யப்பட்ட 21 நாட்களுக்குள் செய்யப்படாவிட்டால், குறிப்பிட்ட நடைமுறைக்கு உட்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

அனுப்புநரின் கையொப்பம் தேதியுடன்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பெறப்பட்ட தொகை..............................
சேவை கட்டணம்..............................
பணவிடை எண்..............................
மின்னஞ்சல் பணவிடை..............................
iMO..............................
கைபேசியில் இருந்து கைபேசிக்கு பணவிடை..........
பதிவு செய்யப்பட்ட தேதி நேரம்..............................

அதிகாரியின் கையொப்பம்
CPM / SPM / DPM / APM

நீள்வட்ட முத்திரை

அஞ்சல் எழுத்தரின் கையொப்பம்

பாடம் 21

அ. சாதனைப் பெண்கள்

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றார் கவிமணி. இப்படி மாதவம் செய்து பிறக்கும் பேறுபெற்றவர் பெண்கள். இவ்வாறு இருக்கும்போது, "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்று பெண் வளர்ச்சியைத் தடுத்தபோதும் அதைத் தகர்த்தெறிந்து, இன்று பெண் இல்லாத துறையே இல்லை என்று சொல்லுமளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளோம். ஒவ்வொரு துறையிலும் ஆணுக்கு இணையாக பெண்ணானவள் நுழையும்போது, அத்துறையிலுள்ள பல்வேறு சவால்களைச் சந்தித்துத் தனக்கு பின்வரும் பெண்களுக்கு வழிகாட்டியாக விளங்கி கரையேறத் துடிக்கும் பெண்களுக்குக் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர்கள் பலர், அவர்களுல் சிலரைப் பற்றி இப்பாடத்தில் காண்போம்.

திருமதி.சௌமியா சுவாமிநாதன்

தமிழகத்தைச் சேர்ந்த இவர், உலகச் சுகாதார அமைப்பின் ஒரு துறையின் தலைமை விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னால் இந்த அமைப்பின் துணை இயக்குநர் பதவியை கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வகித்துவந்தார். மருத்துவத்துறையில் மேற்படிப்பு பயின்ற இவர், காச நோய் மற்றும் எயிட்ஸ் நோய் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு, இந்நோய் தொடர்புடைய விழிப்புணர்வுத் திட்டங்களில் கலந்துகொண்டு பெரும் பங்காற்றியுள்ளார். இவர், பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படும் வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதன் அவர்களின் மகள் ஆவார்.

திருமதி.பெ.சின்னப்பிள்ளை

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெ. சின்னப்பிள்ளை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகக் கிராமப்புறங்களில் தவிர்க்க முடியாத ஆளுமையாக இருந்து வருகிறார். மகளிர் சுய உதவிக் குழுக்களில் ஆரம்பித்த அவரது பணி, இன்று மது, கந்து வட்டி ஆகியவற்றுக்கு எதிரான விழிப்புணர்வு பணியாக தொடர்கிறது.

களஞ்சியம் பெண்கள் சுய உதவிக் குழு அமைப்பின் தலைவராக பொறுப்பேற்று கிராமப்புற ஏழைப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பணியாற்றி வருகிறார். இவரின் சமூகச் சேவையைப் பாராட்டி மத்திய மாநில அரசுகள் பல விருதுகளை அளித்து கௌரவித்துள்ளன எனினும், சக்தி புரஸ்கர் விருது மூலம் தேசிய அளவில் அறிமுகமான சின்னப்பிள்ளைக்கு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி மீண்டும் கௌரவித்தது.

டாக்டர் முத்துலெட்சுமி

தமிழ் நாட்டின் தென்கோடி மாவட்டங்களில் ஒன்றான புதுக்கோட்டையில் 1886 ஆம் ஆண்டு பிறந்தார். இவர், திண்ணைப் பள்ளியில் பயின்று பல தடைகளைத் தகர்த்தெறிந்து 1912 ஆம் ஆண்டு, நாட்டின் முதல் மருத்துவர் என்ற பெருமை பெற்றவர் ஆவார். இவர் 1926 ஆம் ஆண்டில் 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அகில உலகப் பெண்கள் மாநாட்டில், இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார் இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் ஆவார். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் பதவியையும் அலங்கரித்தவர். 1925 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் சட்டசபை துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தேவதாசி முறை ஒழிப்பு, இருதாரத் தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தை திருமணத் தடைச் சட்டம் போன்ற பல புரட்சிகரமான சட்டங்களை நிறைவேற்றியவர். பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும்பொருட்டு சென்னை அடையாறில் அவ்வை இல்லம் அமைத்தவர், புற்று நோயால் பாதிக்கப்படுவோருக்கு அடையாறு புற்று நோய் மருத்துவமனை அமைத்து

பல உயிர்களைக் காத்தவர். இவருக்கு ஒன்றிய அரசு 1956–இல் பதமபூஷன் விருது வழங்கி கௌரவித்தது.

திருமதி. கே.பி. சுந்தராம்பாள்

1908 ஆம் ஆண்டு, ஈரோடு மாவட்டம் கொடுமுடி என்னும் ஊரில் பிறந்தவர். இளம் வயதிலேயே தந்தையை இழந்ததால் வறுமை இவரை வாட்டி வதைத்தது. இதன் காரணமாக இரயிலில் பாடல் பாடி அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வாழ்ந்த சமயத்தில், திரு. நடேசஐயர் என்பவர் இவரது பாடல் பாடும் திறமையைக் கண்டு நாடகக் கம்பெனியில் சேர்த்துவிட்டார். வள்ளி திருமணம், நல்ல தங்காள், பவளக்கொடி போன்ற நாடகங்களில் நடித்துத் தமிழக மக்களிடையே புகழ்பெற்றவராக விளங்கினார். 1933 – இல் நடிப்புத் துறையில் புகழ்பெற்ற கிட்டப்பாவைத் திருமணம் செய்துகொண்டார். துன்பம் தன்னை விடாது துரத்த இருபத்தைந்தாவது வயதில் தன்னுடைய கணவரை இழந்தார். பின்னர் நந்தனார், மணிமேகலை, ஔவையார், மகாகவி காளிதாஸ், திருவிளையாடல், காரைக்கால் அம்மையார் போன்ற படங்களில் நடித்துப் புகழின் உச்சியை அடைந்தார். 1958 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் தேந்தெடுக்கப்பட்டார். ஒன்றிய அரசு இவரைப் பெருமைப்படுத்தும்விதமாக பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.

தனக்கு வந்த சோதனைகள் அனைத்தையும் தகர்த்து வெற்றிவாகை சூட வயது ஒரு தடையே இல்லை என்பதை மேற்கண்ட சாதனைப் பெண்கள் மூலம் அறியலாம். நாமும் இவர்களைப் போல் சாதனைப் படைத்து சரித்திரத்தில் இடம் பெறுவோம்.

ஆ. பட விளக்கக் காட்சி – தகவல் திரட்டுதல்

இரகு தன் குடும்பத்தில் நடைபெறும் குடும்ப விழாவிற்காகத் தேவையான பழங்களைப் பழக்கடையில் வாங்கினார். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்	பழங்களின் பெயர்கள்	அளவு (எண்ணிக்கையில்)
1	வாழைப்பழம்	30
2	பப்பாளிப்பழம்	15
3	கொய்யாப்பழம்	18
4	மாம்பழம்	20
5	சீத்தாப்பழம்	12

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

1. இரகு மொத்தம் எத்தனை வகையான பழங்கள் வாங்கினார்?
2. எந்தப் பழம் அதிக எண்ணிக்கையில் வாங்கப்பட்டது?
3. எந்தப் பழம் குறைவாக வாங்கப்பட்டது?
4. எண்ணிக்கையில் 18 என வாங்கப்பட்ட பழம் எது?
5. முக்கனிகளில் இருகனிகளான வாழைப்பழம் மற்றும் மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

பயிற்சிகள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

(திருமதி. சின்னப்பிள்ளை, டாக்டர். முத்துலெட்சுமி, கொடுமுடி, உலக சுகாதார அமைப்பு)

1. திருமதி சௌமியா சுவாமிநாதன் -------------------------- தலைமை விஞ்ஞானியான நியமிக்கப்பட்டுள்ளார்.
2. களஞ்சியம் பெண்கள் கல்விக் குழு அமைப்பின் தலைவர் ----------.
3. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ---------------.
4. கே.பி.சுந்தராம்பாள் ---------- என்னும் ஊரில் பிறந்தார்

2. கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து புதிய சொல்லை உருவாக்கி கண்டுபிடித்து எழுதுக.

1. தேநீர் – நீர்
2. வீட்டுவேலை – ----------
3. திருமணம் – ----------
4. பொதுஅறிவு – ----------
5. உயர்கல்வி – ----------
6. களர்நிலம் – ----------

3. படத்தையும் பெயரையும் பொருத்துக.

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி
கவிக்குயில் சரோஜினி தேவி
இந்தியாவின் முதல் பெண் பிரதமர்
தங்க மங்கை பி. டி. உஷா
விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா
கருணை அன்னை தெரேசா



4. வினாக்களுக்கு விடையளிக்க.

1. திருமதி.சௌமியா சுவாமிநாதன் அவர்கள் எந்தத் துறையின் சிறப்பு மருத்துவர் ?
2. திருமதி.சின்னப்பிள்ளைக்கு ஒன்றிய அரசு வழங்கி கௌரவித்த விருது யாது ?
3. சாதனைப் பெண்கள் இருவரின் பெயர்களைக் கூறுக ?
4. திருமதி. கே.பி.சுந்தராம்பாளை நாடகத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர் யார் ?

5. செவ்வக வரைபடம்

இதழ்கள் படிப்போரின் விவரப்பட்டியல் கீழேஉள்ள செவ்வக விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.



பின்வரும் விவரங்களுக்கு விடையளிக்க

1. விளக்கப்படத்தில் எத்தனை இதழ்கள் குறிக்கப்பட்டுள்ளன?
2. எத்தனை பேர் தினசரி இதழ்கள் வாசிக்கின்றனர்?
3. 300 பேர் எந்த இதழை வாசிக்கின்றனர்?
4. மிகக்குறைவான எண்ணிக்கையில் வாசிக்கப்படும் இதழ் எது?
5. தினசரி இதழ் மற்றும் வார இதழ் வாசிப்போர்களின் எண்ணிக்கைக்கு இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?

பாடம் 22

அ. தூய்மை பாரதம் மற்றும் கிராம சபை

இராமு வழக்கம்போல் காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு நல்ல உடை உடுத்திக்கொண்டார். அவர் மனைவி கனகாவும் பார்த்துப் பார்த்து நல்ல புடைவையாக உடுத்திக்கொண்டார். இருவரும் வீட்டைவிட்டு வெளியே கிளம்பினார்கள்.

அந்த நேரம் பக்கத்து வீட்டு சுப்பு, "என்ன ராமுண்ணா? இருவரும் வெளியே கிளம்பிவிட்டீர்கள் போலும். இன்று வேலைக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். அதற்கு இராமு, "தினமும்தான் வேலைக்குப் போகிறோம். இன்று ஒரு நாளாவது நம் கிராம மக்களுக்காக, நமக்காகப் பேசுவோம் என்றுதான் கிராமசபைக் கூட்டத்திற்குப் போகிறோம். அதுமட்டுமில்லாம, கிராம சபைக் கூட்டம் ஆண்டுக்கு ஆறு முறைதான் கூடும். அதாவது,

குடியரசு தினம்	–	ஜனவரி 26
உலக தண்ணீர் தினம்	–	மார்ச் 22
தொழிலாளர் தினம்	–	மே 1
சுதந்திர தினம்	–	ஆகஸ்ட் 15
காந்தி பிறந்த நாள்	–	அக்டோபர் 2
உள்ளாட்சி தினம்	–	நவம்பர் 1

EF9EX

ஆகிய நாள்களில் மட்டும்தான். இன்று குடியரசு நாள் அல்லவா? அதனால்தான் கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்கள்" என்றார்.

"ஆமாம், இராமுண்ணா, கூட்டம் கூடுவதற்கு 7 நாளுக்கு முன்பே நம் கிராமத்தில தகவல் கொடுத்தார்களே. அப்படியென்றால், நீங்கள் இருவரும் கிராம சபைக்குத்தான் போறீங்களா?" என்று கேட்டார் சுப்பு.

ஆமாம் தம்பி என்று கூறிவிட்டுக் கிராம சபைக் கூட்டம் நடக்கும் இடம்நோக்கி, இருவரும் நடக்க ஆரம்பித்தனர்.

இருவரும் கிராம சபைக் கூட்டத்திற்குள் நுழையும் நேரத்தில் பஞ்சாயத்துத் தலைவர் தலைமையேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். கூட்டத்தில் எல்லாப் பிரிவு மக்களும் கலந்துகொண்டனர். இடையிடையே மக்கள் கிராம நலன் சார்ந்த வினாக்களைக் கேட்டனர். கூட்டத்தில் ஆண்டு வளர்ச்சித்திட்டம், வரவுசெலவு கணக்குத் தணிக்கைக்கு ஒப்புதல் தருதல் போன்ற நிகழ்வுகள் நடந்தன. கிராம இளைஞர்களுக்கான படிப்புதவி, வேலை வாய்ப்பு வசதி, சுகாதார வசதி, சாலை வசதி முதலியவற்றைப் பற்றி விவாதித்தனர்.

சுகாதாரத்துறை அலுவலர் சுத்தமாக இருப்பதைப் பற்றிப் பேசினார். இதைக்கேட்டுக் கொண்டிருந்த மரகதம்மாள், "ஏன் சார், நாங்க சுத்தமாகத் தானே இருக்கோம்? நாள்தோறும் குளிக்கிறோம். வீட்டைக் கழுவி, துணிமணிகளைத் தோய்த்து நல்லாத்தானே இருக்கோம்? இதைப் போய் சொல்ல வந்துட்டீங்களே?" என்றார்.

"சுத்தமா இருக்கோம்னு சொன்னீங்களே, இப்ப நீங்க பயன்படுத்தாம திறந்த வெளியில் உள்ள ஆட்டுக்கல், உரல் போன்ற பொருள்கள், பயன்படுத்திட்டுத் தூக்கி எறிந்த தேங்காயின் ஓடு, நெகிழி (பிளாஸ்டிக்) கிண்ணங்கள், ரப்பர்க் குழாய்கள் (டயர்) இவற்றிலெல்லாம்கூடத் தேங்கி நிற்கிற மழைத் தண்ணீரில் கொசுக்கள் முட்டையிடுவதால், கொசுக்களோட உற்பத்தி எண்ணிக்கை பெருகும்" என்றார் அலுவலர்.

"ஏன் சார், சாக்கடைத் தண்ணியிலதான கொசுமுட்டை இடும். மழைத் தண்ணி நல்ல தண்ணிதானே சார்?" என்று மங்கை கேட்டார்.

"நல்லாக் கேட்டீங்கம்மா. இந்த மாதிரி நல்ல தண்ணியிலதான் 'ஏடிஸ், ஏஜிப்தி, கொசு ' உருவாகும். அதனால, நாம குடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற தண்ணீர்ப் பாத்திரம்முதல் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிவரை மூடி வைக்கவேண்டும். நாள்தோறும் அவற்றைத் தூய்மைப் படுத்தவேண்டும். நம்மைச் சுற்றி எந்த இடத்திலும் எந்தப் பொருளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கொசு பகலில்தான் நம்மைக் கடிக்கும்.

மேலும் இந்த 'ஏடிஸ்' கொசுவால்தான் 'டெங்கு காய்ச்சல்' உருவாகிறது. இதனை நாம் அலட்சியப்படுத்தினால், உயிரிழப்பு கூட ஏற்படலாம் என்றார் அலுவலர்."

"அப்படியா? இந்த டெங்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறத நாங்க எப்படித் தெரிந்துகொள்வது? என்றார் வள்ளியம்மாள்.

"காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல்வலி, வாந்தி, வயிற்றுவலி, கண்ணுக்குப் பின்புறம் வலி, எலும்பு, மூட்டுகளில் வலி' இதெல்லாம் இந்தக் காய்ச்சலோட அறிகுறிகள். மேலும், காய்ச்சல் வந்தவருக்கு இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்திலிருந்து 20 ஆயிரத்துக்கும் கீழே குறைந்துவிடும். இதனால் உயிரிழப்பு ஏற்படும் ஆபத்து உண்டு என்று விளக்கினார் அலுவலர்."

"ரொம்ப நன்றிங்க ஐயா, பயன்படுத்தாம கிடக்கும் உடைந்த பொருள்கள், தொட்டிகள் என்று எதிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்கிறோம்" என்றார் செல்வராசு.

"நாட்டு மக்களின் நலனுக்காகவே நமது பாரதப் பிரதமர் அவர்கள் "தூய்மை பாரதம்" என்னும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். இத்திட்டம், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது" என்று முடித்தார் அலுவலர்."

அரசு வளர்ச்சி நலத்திட்டங்கள், செயல்பாடுகள் பற்றிக் கூட்டத்தில் ஆய்வு செய்தனர். பலருடைய கருத்துகள் வரவேற்கப்பட்டன. அனைவரிடமும் கையொப்பம் வாங்கினர். தீர்மானங்கள் வட்டார வளர்ச்சி அலுவலகத்துக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கும் அனுப்ப முடிவுசெய்யப்பட்டன. கூட்டம் நிறைவு பெற்றதும் அனைவரும் கலைந்து சென்றனர். இராமுவும் கனகாவும் கிராமசபைக் கூட்டத்தில் பங்கு கொண்ட மனநிறைவோடு தம் வீட்டிற்குச் சென்றனர்.

ஆ. 1. அலைபேசி ரீசார்ஜ் திட்டங்களை அறிதல்

கபிலன் : (கடைக்காரரிடம்) 78 ரூபாய் ரீசார்ஜ் செய்யுங்கள்.

பாரி : வாங்க, அண்ணே! ஒருகிலோ அரிசி தாங்க.

கபிலன் : அடடே! பாரி எப்படி இருக்கே?

பாரி : நல்லாயிருக்கேன் அண்ணே. நீங்க எப்படி இருக்கீங்க?

கபிலன் : எங்கப்பா? வரவுக்கும் செலவுக்கும் சரியா இருக்கு. பாரு, நேற்றுத்தான் 78 ரூபாய் ரீசார்ஜ் செஞ்சேன். மறுபடியும் இன்னைக்குப் பண்ணேன்.

பாரி : என்ன திட்டம் (plan) அண்ணா ரீசார்ஜ்?

கபிலன் : ஆ, அது என்னப்பா, நான் 78 ரூபாய்க்குத்தான் ரீசார்ஜ் பண்னேன்.

பாரி : அண்ணா, நீங்க 78 ரூபாய்க்குப் பண்ணாலும் அந்த 78 ரூபாய்க்கு எந்தத் திட்டத்தில போட்டிருக்கிறீங்க என்பதைப் பொருத்து இருக்கு. உங்களுக்கு விளக்கமாச் சொல்றேன், கேளுங்கள்.

ரீசார்ஜ் செய்வதற்கு அலைபேசி நிறுவனங்கள் பல ரீசார்ஜ் திட்டங்கள் கொண்டுள்ளன. நம் பயன்பாட்டிற்குத் தகுந்த திட்டத்தைத் தேர்ந்தெடுத்து ரீசார்ஜ் செய்தால் செலவு குறையும்.

ரீசார்ஜ் திட்டத்தைத் தேர்ந்தெடுக்க நாம் சில விஷயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

- உள்ளூர் எண்களுக்கு / வெளிமாநில எண்கள் வெளிநாட்டு எண்கள்
- இணையப் பயன்பாடு
- நாள்கள்

நான் அதிகம் பயன்படுத்துவதால் திட்டம் 1 ஐத் தேர்ந்தெடுக்கிறேன். நீங்கள் எந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

SI NO	Data STV/Data Combo Voucher in Rs. (Inclusive of Service Tax)	Existing Total Bundled Free Usage	**Revised Total Bundled Free usage**	Validity of Freebies (In calendar Days)
1	78	1 GB	**2 GB**	5
2	98	650 MB	**1 GB**	14
3	155	1 GB	**2 GB**	15
4	156	2 GB	**3 GB**	10
5	198	1 GB	**3 GB**	24
6	292	2 GB	**8 GB**	30
7	444	3 GB	**8 GB**	60
8	451	2 GB + Rs 80 TV	**6 GB + Rs 80 TV**	60
9	549	10 GB	**15 GB**	30
10	561	5 GB	**11 GB**	60
11	821	6 GB	**15 GB**	60
12	3099	15 GB + unlimited on net+ 500 min off net (Local/STD/Roaming) OG Voice calls	**20 GB + Unlimited Local/STD (On net/offnet) (Home/National Roaming)+ 3000 SMS any net**	60

2. பீம் செயலி – (BHIM)

செல்வி : கயல், நாளை என் பேத்தியின் காதணிவிழா, அவளுக்கு நகை வாங்கவேண்டும்.

கயல் : சரி அக்கா, வாங்கிவிடலாம்.

செல்வி : ஆனால், இன்று ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே! நான் வங்கியிலிருந்து பணம் எடுக்கமுடியுமா?

கயல் : கவலைப்படாதே, அக்கா. உன் வங்கிக் கணக்கிலிருந்து கடைக்காரர்க்குச் செயலிவழியாகக் கொடுக்கலாம்.

செல்வி : என்ன செயலியா?

கயல் : ஆமாம், அக்கா அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அலைபேசி செயலி (BHIM) பீம் ஆகும்

BHIM
BHARAT INTERFACE FOR MONEY

(BHIM) பீம் என்பது, இந்தியா அரசால் பணமில்லாப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்ட செயலி. இதன்வழியாக எளிமையாகவும், பாதுகாப்பாகவும் பணமில்லாப் பரிவர்த்தனைகள் பரிமாற்றம் செய்யமுடியும்.

பீம் செயலிவழியாகச் செய்யக்கூடிய பரிவர்த்தனைகள்

- பணம்கொடுத்தல் / பெறுதல்
- தொலைபேசிக் கட்டணம் / அலைபேசிக் கட்டணம்
- மின்கட்டணம்
- சமையல் எரிவாயு
- இணையக் கட்டணம்
- தண்ணீர்க் கட்டணம்

செயலியைப் பயன்படுத்த முதலில் அதனை பதிவு செய்யவேண்டும்.

பதிவு செய்யும்போது, பயன்படுத்தும் அலைபேசியில், வங்கிக்கணக்கில் இணைக்கப்பட்ட அலைபேசிஎண் இருக்கவேண்டும்.

முதன்முதலாகச் செயலியைப் பயன்படுத்தும்போது, உங்கள் வங்கிக்கணக்கிற்கான (டெபிட்கார்ட்) பற்று அட்டையைக் கொண்டுதான் செயல்படுத்த வேண்டும்.

செயலியைத் தரவிறக்கம் செய்தல்



மொழியைத் தேர்ந்தெடுத்தல்



எச்சரிக்கையுடன் பயன்படுத்துதல்



பயன்பாட்டைத்
தேர்ந்தெடுத்தல்



மாதாந்திர கட்டணம்
செலுத்தும் திரை



கடைகளில் பணம்
செலுத்தும் திரை



பயிற்சிகள்

1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.

குடிநீர்	பாத்திரங்கள்	பதாகை	சுகாதாரத் துறை
அலுவலர்	காய்ச்சல்	இயந்திரம்	தூய்மை பாரதம்

2. தூய்மை தொடர்பான பழமொழிகளைப் படித்து எழுதுக.

1. கூழானாலும் குளித்துக் குடி.
2. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
3. சுகாதாரம் நாட்டைக் காக்கும்.
4. சுத்தம் சுகம் தரும்.
5. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

3. படம் பார்த்துப் பெயர் எழுதுக.

4. குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.

1. _______________

			ம	
பா	த்	தி		ம்
			ம்	

2. _______________

		உ	
தோ	ட்		ம்
		ல்	

5. வினாவிற்கு விடையளிக்க.

1. டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசுவின் பெயரை எழுதுக.
2. கொசு உற்பத்தியாகும் இடங்களுள் ஒன்றைக் குறிப்பிடுக.
3. பயன்படுத்தாத அம்மி, ஆட்டு உரல் போன்றவற்றை என்ன செய்யவேண்டும்?
4. டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகள் யாவை?
5. இராமுவும் கனகாவும் எங்குச் சென்றனர்?
6. கிராமசபைக் கூட்டத்தில் எவற்றைப் பற்றி விவாதித்தனர்?
7. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யாருக்கெல்லாம் அனுப்பினர்?

6. படிகளை வரிசைப்படுத்துக.









7. பின்வரும் தொடர்களை எழுதிக்காட்டுக.

1. இராமுவும் கனகாவும் கிராமசபை கூட்டத்திற்குச் சென்றனர்.

   ----

2. கிராமசபை கூட்டம் ஆண்டுக்கு ஆறு முறைதான் கூடும்.

   ----

3. கிராமசபை கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

   ----

8. பொருத்துக.

1. குடியரசு நாள்	–	அக்டோபர் 2
2. தொழிலாளர் நாள்	–	ஜனவரி 26
3. காந்தி பிறந்த நாள்	–	ஆகஸ்டு 15
4. விடுதலை நாள்	–	மே 1

9. கோடிட்ட இடங்களை நிறப்புக.

1. கிராமசபை ஆண்டுக்கு -------முறைதான் கூடும்.
2. கிராமசபைக் கூட்டம் கூடுவதற்கு ------நாளுக்கு முன்பே தகவல் தெரிவிப்பர்.
3. கூட்டத்திற்குத் தலைமையேற்றவர்----------.

10. பின்வரும் ரீசார்ஜ் திட்டங்களில் ஏற்றதைத் தேர்ந்தெடுக்க.

1. இரவி தன் வீட்டுப்பாடம் செய்ய நிறைய படங்கள் பதிவிறக்கம் செய்யவேண்டும்.

2. ஹரி தன் கடையை விரிவாக்கம் செய்ய அதிகம் உள்ளூர் வாடிக்கையாளரிடம் பேசவேண்டும்.

3. மீனா தம் ஊரிலிருந்து சிங்கப்பூர் சுற்றுலா சென்றுள்ள தன் தந்தையிடம் பேசவேண்டும்.

மதிப்பீடு – 6

1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.

குடிநீர்	பாத்திரங்கள்	பதாகை	சுகாதாரத் துறை
அலுவலர்	காய்ச்சல்	இயந்திரம்	தூய்மை பாரதம்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

(திருமதி. சின்னப்பிள்ளை, டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி, உலக சுகாதார அமைப்பு)

1. திருமதி சௌமியா சுவாமிநாதன் -------------------------- தலைமை விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
2. களஞ்சியம் பெண்கள் கல்விக் குழு அமைப்பின் தலைவர் ----------.
3. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ---------------.

3. கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து புதிய சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.

1. தேநீர் – ---------
2. பொதுஅறிவு – ----------
3. உயர்கல்வி – ----------

4. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பயன்படுத்தாத அம்மி, ஆட்டு உரல் போன்றவற்றை என்ன செய்யவேண்டும்?
2. டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகள் யாவை?
3. இராமுவும் கனகாவும் எங்குச் சென்றனர்?
4. கிராமசபைக் கூட்டத்தில் எவற்றைப் பற்றி விவாதித்தனர்?
5. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யாருக்கெல்லாம் அனுப்பினர்?

5. பின்வரும் தொடர்களை எழுதிக்காட்டுக.

1. இராமுவும் கனகாவும் கிராமசபைக் கூட்டத்திற்குச் சென்றனர்.

----

2. கிராமசபைக் கூட்டம் ஆண்டுக்கு ஆறு முறைதான் கூடும்.

----

6. பொருத்துக.

1.	குடியரசு நாள்	–	அக்டோபர் 2
2.	தொழிலாளர் நாள்	–	ஜனவரி 26
3.	காந்தி பிறந்த நாள்	–	ஆகஸ்டு 15
4.	விடுதலை நாள்	–	மே 1

7. இரகு தன்னுடைய குடும்பத்தில் நடைபெறும் குடும்ப விழாவிற்காகப் பழக்கடையில் பழங்கள் வாங்கினார். அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ.எண்	பழங்களின் பெயர்கள்	அளவு (எண்ணிக்கையில்)
1	வாழைப்பழம்	30
2	பப்பாளிப்பழம்	15
3	கொய்யாப்பழம்	18
4	மாம்பழம்	20
5	சீதாப்பழம்	12

அட்டவணையைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. எத்தனை பழங்கள் கொடுக்கப்பட்டுள்ளன?
2. எந்தப் பழம் அதிக எண்ணிக்கையில் வாங்கப்பட்டது?
3. எந்தப் பழம் குறைவாக வாங்கப்பட்டது?

8. படிகளை வரிசைப்படுத்துக.









பாடம் 23

விண்ணப்பம்

வங்கிக் கடன் வேண்டி விண்ணப்பித்தல்

திருவூர்
27 – 08 – 2022

அனுப்புநர்

கா. மணியம்மாள், க/பெ. கார்த்திகேயன்,
27, பூந்தோட்டத் தெரு,
திருவூர் ஊராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்,
அஞ்சல் குறியீட்டு எண் – 602 025.

பெறுநர்

பொது மேலாளர்,
இந்தியன் வங்கி,
திருவூர் கிளை,
திருவள்ளூர் மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : சுயதொழில் மேம்படுத்த, வங்கிக் கடன் வேண்டுதல் – சார்பாக.

வணக்கம். நான் திருவூர் ஊராட்சியில் சொந்த வீட்டில் வசித்து வருகின்றேன். தையல் கடை மூலம் நிரந்தர வருமானம் ஈட்டுகிறேன். சுயதொழிலை மேலும் விரிவு செய்வதற்குத் தையல் இயந்திரங்கள் வாங்க விரும்புகிறேன். ஆகையால், பிரதம மந்திரியின் முத்ரா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) மட்டும் தனிநபர் கடன்வகை மூலம் வழங்குமாறு வேண்டுகிறேன்.

இவ்விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களின் நகல்களையும் இணைத்துள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(கா. மணியம்மாள்)

இணைப்பு

1. வீட்டுவரி கட்டிய பற்றுச்சீட்டு
2. கடன் நிலுவையில் இல்லை என்பதற்கான உறுதிச்சான்று

சாலை வசதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக

அனுப்புநர்

கா. மணியம்மாள், க/பெ. கார்த்திகேயன்
27, பூந்தோட்டத் தெரு,
திருவூர் ஊராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.
அஞ்சல் குறியீட்டு எண் – 602 025.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : சாலை வசதி வேண்டுதல் – சார்பாக.

தங்கள் உண்மையுள்ள,

கற்போர் இறுதி மதிப்பீடு

(மதிப்பீடு – 7)

கற்போர் பெயர் : ______________________ கிராமம் / வார்டு :____________

ஒன்றியத்தின் பெயர் : ______________________ மாவட்டம்:____________________

அ. படித்தல் (மொத்தம் 40 மதிப்பெண்கள்)

1. பின்வரும் தொடர்களைப் படித்துக்காட்டுக. **(5 x 2 = 10 மதிப்பெண்கள்)**

1. தம்பி, பழம் பறித்தான்
2. கற்போர் வாழ்வில் ஏற்றம் உண்டு.
3. வாக்களிப்பது நம் உரிமையும் கடமையும் ஆகும்.
4. எழுத, படிக்கக் கற்றுக்கொள்வதற்கு வயது தடையில்லை.
5. உடல்நலம் காக்கும் உணவுகளையே உண்ணவேண்டும்.

2. செய்தித்தாளில் இடம்பெற்றுள்ள தொடர்களைப் படித்துக்காட்டுக.

(5 x 3 = 15 மதிப்பெண்கள்)

1. தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு 1993 முதல் நடத்தப்படுகிறது.
2. மாநகராட்சியின் நடவடிக்கைகளால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.
3. மருத்துவ உபகரண உற்பத்தி பூங்காவை நிறுவ மத்திய அரசு அனுமதியளித்தது.
4. ஒலிம்பிக்கில் பங்கேற்க, இந்திய வீரர் தோமர் தகுதி பெற்றுள்ளார்.
5. காற்று மாசற்ற பயணம் மேற்கொள்ள மெட்ரோ ரெயில் நிறுவனம் அழைக்கிறது.

3. பின்வரும் நிகழ்வைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.

(5 x 3 = 15 மதிப்பெண்கள்)

கண்மணி, உணவு உண்டாள். சிறிதுநேரத்திற்குப் பின் வயிறு வலிப்பதாக உணர்ந்தாள். அதனால், அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றாள். மருத்துவர், குறிப்பிட்ட ஒரு மருந்தை, மருந்துச்சீட்டில் எழுதித் தந்தார். கண்மணி, மருந்தகத்திற்குச் சென்றாள். மருந்துக் கடைக்காரர், அந்த மருந்து இல்லாததால், வேறு ஒரு மருந்தை மாற்றிக் கொடுத்தார். இதை அறியாத கண்மணி, அந்த மருந்தைச் சாப்பிட்டாள். வயிற்று வலி மேலும் கடுமையானது. வலி தாங்கமுடியாமல், மீண்டும் அதே மருத்துவரிடம் சென்றாள். அவள் சாப்பிட்ட மருந்தை வாங்கிப் பார்த்தார் மருத்துவர். அது, அவர் எழுதித் தந்த மருந்து இல்லை. அதனால், மருந்துக் கடைக்காரர் செய்த தவற்றைக் கண்மணியிடம் மருத்துவர் கூறினார்.

வினாக்கள்

1. கண்மணிக்கு என்ன நேர்ந்தது?

___

2. கண்மணி யாரைப் பார்க்கச் சென்றாள்?

___

3. கண்மணிக்கு வயிற்றுவலி ஏன் கடுமையானது?

___

4. தனக்கு ஏற்பட்ட நிலைமைக்காகக் கண்மணி யார்மீது வழக்குத் தொடுக்கலாம்?

___

5. கண்மணியின் குறை தீர்ப்பதற்கு எந்தச் சட்டம் உதவும்?

___

ஆ. எழுதுதல் (மொத்தம் 30 மதிப்பெண்கள்)

4. வாக்காளருக்கான பெயர் சேர்ப்புக்கான விண்ணப்பத்தில் தேவைப்படும் தகவல்களை நிரப்புக. (மொத்தம் 10 மதிப்பெண்கள்)

1. பெயர் ------------------------ (2 மதிப்பெண்)
2. வயது ------------------------ (2 மதிப்பெண்)
3. பாலினம் ------------------------ (2 மதிப்பெண்)
4. வீட்டு முகவரி ------------------------ (4 மதிப்பெண்)

5. அன்றாட வாழ்வில், நீங்கள் பயன்படுத்தும் பொருள்களுள் சிலவற்றின் பெயர்களை எழுதுக. (5 x 2 = 10 மதிப்பெண்)

1. ஏதேனும் ஒரு பழத்தின் பெயர் ----------------------
2. ஏதேனும் ஒரு காயின் பெயர் -----------------------
3. உங்கள் சமையலறைக் கருவிகளுள் ஒன்று ---------------
4. நீங்கள் அணியும் அணிகலன்களுள் ஒன்று ----------------
5. உங்களுக்கு மிகவும் பிடித்த உணவுப்பொருள் --------------.

6. உங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தரவேண்டி, நூலக ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக. (10 மதிப்பெண்)

அனுப்புநர்

இடம் :

நாள் :

பெறுநர்

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மையீர்,

பொருள் :

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

இ. எண்ணறிவு (மொத்தம் 30 மதிப்பெண்கள்)

7.1 விடுபட்ட எண்களை எழுதுக. (4 x 1 = 4 மதிப்பெண்கள்)

90	91		93		95		97		99	100

பின்வரும் கணக்குகளுக்கு விடை காண்க. (8 x 2 = 16 மதிப்பெண்கள்)

7.2 கூட்டல்

1) 6
+ 8

-----

2) 5 ரூபாய்
+ 20 ரூபாய்

7.3 கழித்தல்

3) 7 லிட்டர்
– 4 லிட்டர்

-----

4) 45 பழம்
– 28 பழம்

7.4 பெருக்கல்

5) 5
x 4

----

6) 15
x 9

7.5 வகுத்தல்

7) 10 ÷ 2 =

8) 24 ÷ 3 =

7.6 மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக. (5 x 1 = 5 மதிப்பெண்கள்)

7.7 நிரப்புக. (5 x 1 = 5 மதிப்பெண்கள்)

1. ஒரு கிலோ மீட்டர் = --------- மீட்டர்
2. ஒரு மீட்டர் = --------- சென்டிமீட்டர்
3. முக்கால் மீட்டர் = --------- சென்டிமீட்டர்
4. அரை மீட்டர் = --------- சென்டிமீட்டர்
5. கால் மீட்டர் = --------- சென்டிமீட்டர்

உயிரெழுத்துகள்

























மெய்யெழுத்துகள்



UC1CX

புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் கற்றல் விளைவுகள்		
எழுத்தறிவு	**எண்ணறிவு**	**கூடுதல் திறன்கள்**
• எழுத்துகளை அடையாளம் கண்டு படிக்கும் திறன் பெறுவர். • தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களின் வரிவடிவத்தைப் புரிந்துகொள்வர். • தாம் காணும் விளம்பரங்கள், நாளிதழ்கள், புத்தகங்கள் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள செய்திகளைப் பிறர் உதவியின்றித் தாமே படித்துக்காட்டுவர். • நிமிடத்திற்கு 40 சொற்களை வாய்விட்டும், 50 சொற்களை மனத்திற்குள்ளும் படித்துக்காட்டும் திறன் பெறுவர். • எழுத்துகளின் வரிவடிவத்தைப் புரிந்துகொண்டு, உரிய முறையில் எழுதிக் காட்டுவர். • அன்றாட வாழ்வில் தம் தேவைகளுக்காக விண்ணப்பம்/ கடிதம்/ படிவம் போன்றவற்றை எழுத அறிவர். • தற்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, திறன்பேசி, கணினி போன்றவற்றைப் பயன்படுத்தவும் எழுத்துருக்களைப் பயன்படுத்தவும் அறிவர். • தன்னம்பிக்கையுடன் கையொப்பம் இடுவதற்கு அறிவர். • தமக்கு வரும் கடிதங்களைப் படித்து, அவற்றிற்குப் பதிலளிப்பர். • படிப்பதிலும் எழுதுவதிலும் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்து, சமுதாயத்தில் எழுத்தறிவு பெற்று, வாழ்வில் முன்னேற்றம் காண்பர்.	• 1 முதல் 1000 வரை எண்களை எழுத அறிவர். • ஓரிலக்கக் கூட்டல், கழித்தல் கணக்குகளைச் செய்துகாட்டுவர். • நீட்டல், நிறுத்தல், முகத்தல் போன்ற அளவைகளை அறிந்துகொண்டு, தம் அன்றாட வாழ்க்கைக் கணக்குகளில் பொருத்திப் பார்ப்பர். • கடிகாரத்தில் நேரமறிதல், தொடர்வண்டி நிலையம் போன்ற இடங்களில் பயன்பாட்டிலிருக்கும் 24 மணி நேரத்தைப் புரிந்துகொள்வர். • வார நாள்கள், மாதங்கள், நாள்காட்டி, பருவங்கள் போன்றவற்றை அறிந்துகொள்வர். • பயணச்சீட்டு முன்பதிவு, வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம், காசோலை, வங்கி/ அஞ்சலகப் படிவங்கள், செல்பேசி ரீசார்ஜ் திட்டங்கள், பீம் செயலி போன்றவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்த அறிந்துகொள்வர்.	1. சட்ட அறிவு • பெண்களுக்கான சட்டங்கள் • இளைஞர் நீதிச் சட்டம் • போக்சோ சட்டம் இலவசக் • கல்வி உரிமைச் சட்டம் • தகவல் அறியும் உரிமைச் சட்டம் • குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் • பாலியல் தொல்லை தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் • வரதட்சணை தடுப்புச் சட்டம் • அரசு நலத் திட்டங்களுக்கான விண்ணப்பித்தல் 2. வாக்காளர் உரிமை, கடமை 3. பேரிடர் மேலாண்மை 4. சுற்றுப்புறச் சூழலறிவு • இயற்கை உணவுகள் • மரக்கன்று நடுதல் • மண்வளம், நீர் மேலாண்மை 5. உடல்நலமும் சுகாதாரமும் 6. பணமில்லாப் பரிமாற்றம் • ஏடிஎம் மூலம் பணமெடுத்தல் • பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற பணப்பரிமாற்றங்கள் விழிப்புணர்வு • திறன்பேசி துணையுடன் இணையவழிச் சேவைகளைப் பயன்படுத்துதல் • அரசின் நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, விண்ணப்பித்தல் 7. தூய்மை பாரதம் விழிப்புணர்வு 8. இணையவழி மூலம் இருக்கை முன்பதிவு – பேருந்து/ தொடர்வண்டி/ உணவகம்/ தங்குமிட வசதிகள்